DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road
Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue
Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
Thinking of Buying or Selling?
BE SMART & CALL TEAM SMART
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333
teamsmart.ca
ROYAL LEPAGE ignite

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1396 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 6, 2023

# புகழ்பெற்ற நிறுவனமாகப் பேசப்பெற்ற ‘அமேசான்’ தொடர்ச்சியாக ஊழியர்களை பணி நீக்கம் செய்துவருகின்றது

amazon

கொரோனா தொற்று பரவலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள பொருளாதார சூழல் காரணமாக டுவிட்டர், மெட்டா நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களின் ஊழியர்களில் பெரும்பாலானவர்களை கடந்த ஆண்டு நடுப்பகுதியில் பணி நீக்கம் செய்தன.

இதைத்தொடர்ந்து உலகில் புகழ்பெற்ற ஒன்றாகக் கருதப்பெற்ற அமேசான் நிறுவனமும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்திருந்தது. இந்நிலையில் அமேசான் நிறுவனத்தின் தலைமைச் செயலாளர், ஊழியர்களுக்கு நேற்று முன்தினம் காலை ஒரு செய்தி அனுப்பியுள்ளார். அதில், தற்போது நிலவும் கடினமான பொருளாதாரச் சூழ்நிலையை எதிர்கொள்வது சவாலாக உள்ளது. இதனால் மேலும் 18 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவு செய்துள்ளோம் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பணி நீக்கமானது இந்த ஆண்டு தொடக்கத்திலேயே நடைபெற உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருப்பது அந்த நிறுவன ஊழியர்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த செய்தியானது கனடா வாழ் ஊழியர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது.




# 14ம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று ஸ்காபுறோவில் "நீயா நானா? கோபிநாத் எம்மத்தியில் உரையாற்றவுள்ளார்

எதிர்வரும் 14-01-2023 தைப்பொங்கல் தினத்தன்று ஸ்காபுறோ **5183 Sheppard Avenue East** யில் அமைந்துள்ள சீனக் கலாச்சார நிலைய மண்டபத்தில் “நீயா நானா? புகழ் கோபிநாத் எம்மத்தியில் உரை நிகழ்த்த வருகின்றார். இசை நிகழ்ச்சியும் உண்டு

50 டாலர் மற்றும் 20 டாலர் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்களை இணைய வழி ஊடாக தற்பொழுது பெற்றுக் கொள்ளலாம் அதற்கான இணைப்பு: **www.universe.com**

மேலதிக விபரங்களுக்கு:- 647 891 7725 அல்லது 647 762 9512 **www.cyecstoronto.ca/**

# நாளை 7ம் திகதி சனிக்கிழமை அனலை எக்பிறஸ் நிறுவனம் வழங்கும் ‘பாரம்பரியம்’ முத்தமிழோடு கலைஞர்களின் சங்கமம்

ஸ்காபுறோவில் அமைந்துள்ள சீனக் கலாச்சார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை அனலை எக்பிறஸ் ஊடக நிறுவனம் வழங்கும் ‘பாரம்பரியம்’ என்னும் முத்தமிழோடு கலைஞர்களின் சங்கம நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு உள்ளே 16ம் பக்கத்தில் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்.




JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
ROYAL LEPAGE ignite

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East
Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23 -8907 The Gore Rd,
Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive,
Markham ON. L3S 4N8

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524


2023
Happy
NEW
Year
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
Logan Kanapathi
MPP Markham–Thornhill
Tel: 905-305-1935
logan.kanapathico@pc.ola.org

# உதயன் கதிரோட்டம்

## தமிழர்களின் விடுதலை வேட்கையை தகர்க்க பிச்சை எடுத்த இலங்கை இப்போது பிச்சைப் எடுப்பதற்காக தமிழர் உரிமை பற்றி பேசுவதற்கான ஆர்வத்தில்..?

இலங்கையில் நீண்ட கால நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வைக் காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. என்ற நாடகம் தற்போது கொழும்பில் 'மேடை' ஏற்றப்படுவதற்கு தயாரான நிலையில் உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. 'இரண்டு வருடத்திற்கான' ஜனாதிபதி என்ற பெயரோடு அவசர அவசரமாக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் அடிப்படையில் இப்பிரச்சினைக்கான தீர்வை விரைவாகக் காண்பதற்கான இணக்கப்பாட்டை எட்டும் வகையிலான கலந்துரையாடல்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன என்ற செய்திகளை அழகிய தலைப்புக்களோடு அரச சார்பு ஊடகங்கள் வெளியிட்ட வண்ணம் உள்ளன. அதே வேளை அரசாங்கத்திற்கு ரணிலுக்கும் சாதகமான போக்குகள் கொண்ட சம்பந்தன் ஐயா போன்ற 'போலியான' தலைவர்கள் ரகசியப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன.

இதேவேளை இலங்கைக்குக் கிடைத்த வெற்றுச் சுதந்திரத்தினால் பயன் எதுவும் பெற்றுக்கொள்ளாத தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் வாடி வதங்கியவர்களாக இருக்கையில். 75 வது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளுத என்பதையும் அரசாங்கத் தரப்பு அறிவித்துள்ளது. அதற்கு முன்னர் நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வைக் காண்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கான கலந்துரையாடலுக்கு கடந்த நவம்பர் இறுதியில் ஜனாதிபதி அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார் எனவும் அதனை அடிப்படையாகக் கொண்டு டிசம்பர் மாத நடுப்பகுதியில் முதலாவது கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளது. அதனைப் பின்புலமாகக் கொண்டு இம்மாதம் இரண்டாவது வாரம் முதல் தொடர் கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றெல்லாம் மக்களை ஏமாற்றும் செய்திகளும் போலி நாடகங்களும் பரவுகின்றன. இதில் அரச சார்பு ஊடகங்கள் போட்டி போட்டுக்கொண்டு செயற்படுகின்றன என்பதே உண்மை. இவ்வாறான நிலை எமது கனடா உதயன் பத்தி எழுத்தாளர் நிலாந்தன் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து எழுதியுள்ள வாராந்த மடலில் தனது ஆதங்கத்தை நேரடியாகவே பதிவு செய்துள்ளார். 2023 ஆம் ஆண்டிலாவது உலக நாடுகளிடம் கையேந்தாத நிலைக்கு இலங்கை வளர்ச்சியடைய வேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் அவர்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.ஆனால் நாடு இந்த ஆண்டு மட்டுமல்ல இனி வரும் ஆண்டுகளிலும் பிச்சை எடுக்காமல் தப்பிப்பிழைக்க முடியாது என்பதே மெய்நிலை ஆகும். இவ்வாறான ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலை அங்கு உருவாகிவிட்டதான உண்மை நிலையை அவர் சொல்லுகின்றார் தனது வாராந்தப் பதிவில்.
இவ்வாறாக கடன் வாங்கி அல்லது பிச்சை எடுத்து யுத்தம் செய்த ஒரு நாடு இப்பொழுது பிச்சை எடுப்பதற்காக சமாதானம் செய்கிறது என்பதுதான் நூதனமான ஒரு மாற்றம். ஆனால் பிச்சை எடுத்து செய்த யுத்தம் உண்மையானது. பிச்சை எடுப்பதற்காக செய்யும் சமாதானம் உண்மையானதா என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. தமிழ் அரசியல்வாதிகள் வெளிப்படையாகச் சொல்ல தயங்கிய விடயங்களை நிலாந்தன் அவர்கள் தனது வாராந்தப் பதிவிடலில் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இவ்வாறாக இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினை தோற்றம் பெற்று பல தசாப்தங்கள் கடந்து விட்டது. இப்பிரச்சினை காரணமாக நாடும், இத்தேச மக்களும் இழந்தவை கொஞ்ச நஞ்சமல்ல. அவ்வாறான இழப்புக்களை கனவில் கூட எண்ணிப் பார்த்திடக்கூடாது என்பதிலும் நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து தரப்பினரும் உடன்பாடாகவே உள்ளனர் என்று பேசப்பட்டாலும். ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள அரசியல்வாதிகளும் தமிழ் மக்களின் வாக்குகளால் எத்தனையோ தசாப்பங்களாக சலுகைகளையும் சுகபோக வாழ்க்கையையும் அனுபவித்து வரும் தமிழ் அரசியல்வாதிகளும் இந்த உண்மையை வெளிப்படையாகக் கூறும் அளவிற்கு அந்த மண்ணில் உண்மை விழித்தெழுவதற்கு அனைத்து வளங்களும் சாதகமாக இல்லை என்பதே யதார்த்தம்.


Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com



## கொழும்பு ஶ்ரீஶ்ரீ ராதாகிருஷ்ண ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வுகள் பக்திபூர்வமாக களைகட்டுகின்றன

கொழும்பு ஶ்ரீஶ்ரீ ராதாகிருஷ்ண ஆலய மஹா கும்பாபிசேகம் இவ்வருடம் மத்திய பகுதியில் நடைபெற மும்முர ஏற்பாடுகள் நடைபெற்றுவரும் நிலையில் மக்களின் பக்திபூர்வமான ஆர்வத்தால் கும்பாபிசேக நிகழ்வுகள் களைகட்டுவதைக்காணக்கூடியதாக இருக்கிறது.
இதேவேளை நாட்டில் செல்வச்செழிப்பு, அமைதி, மகிழ்ச்சி நிலவவேண்டுமென கும்பாபி'ேக நிகழ்வுகளின் ஓர் அம்சமாக மக்கள் பிரார்த்தனை செய்தும் வருகின்றனர்.
கொழும்பு, கொட்டாஞ்சேனை புதுச்செட்டித் தெருவையும், ஜெம்பட்டா வீதியையும் இணைத்து பிரமாண்டமாக உருவாகிக் கொண்டிருக்கிறது ஶ்ரீஶ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம். மக்கள் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும் நாளை பக்தி பூர்வமாக எதிர்பார்த்துள்ளனர்.
ராதாகிருஷ்ண ஆலயத்தின் மூலஸ்தானத்தில் ராஜகோபாலர் வடிவத்தில் ராதையுடன் இணைந்த ராதா ராஜகோபாலரும், ஜகந்நாதர், பலராமர், சுபத்ரா, கிருஷ்ண சைதன்யர், கௌரநித்தாய் ஆகியோரும் எழுந்தருளுவர். மூலமூர்த்தியாக விளங்கும் ராஜகோபாலர், இந்தியா-திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் இருந்து 1982 ஆம் ஆண்டு வருகை தந்து, பிரதி'டா சிரோன்மணி ஶ்ரீலஶ்ரீ விஸ்வநாத குருக்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டு பக்தர்களுக்கு வாத்சல்ய குழந்தையாக ஆட்சி புரிந்து 1990ஆம் ஆண்டு அங்கிருந்து வருகை தந்த ஶ்ரீமதி ராதா ராணியுடன் இணைந்து ராதா ராஜா கோபாலராக திருக்கல்யாணம் கண்டு அருளினார்.
ஜகந்நாத், சுபத்ரா, பலராம் மூவரும் ஜகந்நாத் 'ேத்திரத்திலிருந்து வரவழைக்கப்பட்டு, 1996ஆம் ஆண்டு ஶ்ரீல பிரபுபாதாவின் நூற்றாண்டு விழாவன்று பிரதி'டை செய்யப்பட்டு, பீடத்தில் எழுந்தருளினர்.
இவர்கள் 1999 ஆம் ஆண்டு முதன் முதலாக கொழும்பு புதுச்செட்டித் தெருவ-ில் இருந்து இரதயாத்திரையாகப் புறப்பட்டு வெள்ளவத்தை ராமகிருஷ்ண மி'ன் மண்டபம் வரை சென்று, அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்து மீண்டும் வருகை புரிந்தனர்.
நாட்டில் அமைதி வேண்டி ஆரம்பிக்கப்பட்ட இந்த இரத யாத்திரை, தொடர்ந்து 2017ஆம் ஆண்டு வரை விமர்சையாக நடந்து வந்தது. எதிர்வரும் காலத்தில் பகவான் அகிலாண்ட நாயகன் திருவருளுடன் கும்பாபி'ேகம் கண்டு, ஸ்திரமாக நிலை கொண்ட பின், இந்த இரதயாத்திரை மீண்டும் தொடர்ந்து நிகழ வேண்டும் என்பதே பக்தர்களின் ஆசையும் எதிர்பார்ப்புமாகும்.
புதிதாக அமையும் ஆலயத்தில் கலியுக அவதாரமாகிய ஶ்ரீ கிருஷ்ண சைத்தன்ய மஹாபிரபுவும், அவரது அன்புக்குரிய நித்தியானந்த பிரபுவும் கௌர நிதாய் வடிவ-ில் ராஜகோபாலரின் ஒரு பக்கத்தில் எழுந்தருளுவர்.
புதுச்செட்டித்தெரு வாயில் வழியாக ஆலயத்துக்கு வரும்போது முதலில் நாம் காண்பது ஆஞ்சநேயர் திருவுருவம். இலங்கையை வாலில் இட்ட தீயால் எரித்தவர், ஆனால் வாலில் இருந்த வெப்பம் அவரை சுடவில்லை - குளிர்ச்சி தந்தது.
ராமபிரானின் சேவையில் பதிவிரதா தர்மத்தை கடைபிடித்த சீதா பிராட்டியைக் கண்டுபிடித்து, பின் அரக்கர்களை அழித்து, தான் வந்த நோக்கத்தை நிறைவேற்ற, ராமபிரானுக்கு தலையாய பணி செய்தவர்ஆஞ்சநேயர். அவரைப் பார்த்து திரும்பும் பொழுது, இராமர் சந்நிதி காணப்படுகின்றது. இராமர் சந்நிதிக்கான திரு உருவங்களும் வெங்கடேஸ்வரர் சந்நிதிக்கான திருவுருவங்களும் கட்சிலா விக்கிரங்களாக இந்தியாவிலிருந்து வருகைபுரிந்து இங்கு தானிய வாசம் (நெல்லில் வாசம்) செய்து வருகின்றனர். விரைவில் எழுந்தருளி மக்கள் துயர் துடைக்க நரசிம்ம மூர்த்தியாக பகவான் ஏற்கனவே வருகை தந்து பூஜைகள் கண்டு ஆராதிக்கப்பட்டு வருகிறார். கோவில் அமைப்பதில் ஏற்பட்ட பின்னடைவுகளை நீக்கவும் தோ'ங்களை போக்கவும் பக்த வத்சலனான நரசிம்மமூர்த்தி சந்நிதியும், வடகிழக்கு பக்கத்தில் அமைந்துள்ளது.
இந்த ஆலயத்தின் தற்போதைய நிலைபற்றி வடிவமைப்பாளர் விஷ்வஶ்ரீ சந்தனகுமார் ஸ்தபதி பல தகவல்களைத் தெரிவித்தார். அதன்படி கோவிலின் பிரதான கோபுரம் 61 அடி உயரத்தில் அமைகிறது. 7 தலங்கள் (நிலைகள்) கொண்ட கோபுரம் பூர்த்தி அடைந்துள்ளது. இவற்றுக்கான வர்ணப்பூச்சி வேலைகளும் நிறைவடைந்துவிட்டன.
பிரதான மண்டபத்தில் பகவானின் தசாவதார வடிவங்கள் காட்சியளிக்கின்றன. ஶ்ரீ ராமபிரான், ஶ்ரீ வெங்கடேஸ்வரர் மூர்த்திகள் நிலை கொள்ளும் ஆலயங்களின் விமானங்கள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் நில அமைப்பு, வர்ணம் தீட்டல் போன்ற பல வேலைகள் உள்ளன. பக்தர்களின் உதவிகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டு மத்திய பகுதியில், எப்படியாவது மஹா கும்பாபி'ேகத்தை நிகழ்த்த வேண்டும் என்னும் உறுதியுடன் வேலைகள் தொடர்கின்றன. இத்திருப்பணியில் பக்தர்கள் அனைவரும் பங்கு கொண்டு இறை அருளை பெற்றுக்கொள்ளுமாறு சந்தன குமார் ஸ்தபதியும் ஆலய பக்தர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். ஹரே கிருஷ்ணா.
கிருஷ்ணப்பிரியன் ஆர். ராஜலிங்கம்

**முதியவர் பராமரிப்பாளர் தேவை**

மிஸ்ஸிஸ்ஸாகாவில் வீட்டில் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை காலை 10 மணியில் இருந்து மாலை 6 மணிவரை கவனித்துக்கொள்வதற்கு பெண் உதவியாளர் ஒருவர் உடனடியாக தேவைப்படுகிறார். தகுந்த சம்பளம் வழங்கப்பெறும்.

தொடர்புகட்கு:
(416) 725-6167

**மணமகன் தேவை**

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட, கனேடிய பிரஜாவுரிமை பெற்ற இந்து உயர் வேளாளர் குல மகளுக்கு பெற்றோர் தகுந்த வரன் தேடுகின்றனர். உயரம் 5 அடி 4 அங்குலம். வயது 33.
Completed Doctor of Medicine (Caribbean International Medical University) – Awaiting for Residency Assignment
Proposal from Canada, USA, UK & Sri Lanka will be considered.
தொடர்புகட்கு: (416) 282-5379
அல்லது (416) 953-8297
Email: Kandiah4u@hotmail.com

**BUNGALOW HOUSE FOR RENT**

Brimley & Lawrence சந்திப்பிற்கு அருகில்
3 Bedroom house (upstairs) with 1 kitchen & washroom, Large living hall with Dining space, Washer & Dryer, 3 Parking spaces வாடகைக்கு உண்டு.
Close to SP Grocery store (Sri Lankan), 8mins drive to Scarborough Town Center, & 6mins drive to Scarborough Health Network- General Hospital.
AVAILABLE from March 1st 2023
Call: (647) 995-4043
(647) 719-1220


HAPPY new year 2023
இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal
& Tamil Heritage Month
Hon. Mary Ng, MP
Markham-Thornhill
16 Esna Park Drive, Unit 107, Markham ON L3R 5X1
905-479-8100 | Mary.Ng@parl.gc.ca
maryngmp.ca | @maryngMarkhamThornhill
@Mary_Ng | @Mary_Ng

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்களால் முன்வைக்கப்பட்ட தீர்வை மட்டும் தான் தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள்




2142வது நாள், காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை கண்டறியவும் எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களை காப்பாற்றும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டம் தொடர்கிறது.

ஒவ்வொரு முடிவும் ஒரு புதிய தொடக்கத்தைக் குறிக்கிறது. உங்கள் உறுதியையும் அசைக்காமல் வைத்திருங்கள், நீங்கள் எப்போதும் மகிமை வழியில் நடப்பீர்கள். தைரியம், நம்பிக்கை மற்றும் மிகுந்த முயற்சியுடன், நீங்கள் விரும்பும் அனைத்தையும் அடைவீர்கள்.

தாயகம் மற்றும் புலம் வாழ் தமிழர்களுக்கு நமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

மேலும், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து கவனம் செலுத்த வேண்டும். 75 வருடங்களுக்கு மேலாக அரசியல் தீர்வு என்ற பெயரில் நாம் தொடர்ந்து செல்ல முடியாது.

சிங்களம் தமிழர்களுடன் பேசுவது இரண்டு காரணங்களுக்காக என்பதை முதலில் நாம் உணர வேண்டும். முதல் காரணம், அரசாங்கத்தை தமிழரின் உதவியுடன் அமைப்பதற்க்கு, இரண்டாவது காரணம் அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறுவதற்க்கு.

இந்த நேரத்தில் நாம் வலுவாக இருக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் தீர்வை எந்தத் தமிழர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்கள் உட்பட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட தீர்வை மட்டும் தான் தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

அரசியல் தீர்வை எவ்வாறு காண்பது? தெற்கு சூடான், எரித்திரியா, கொசோவா, கிழக்கு திமோர் ஆகிய நாடுகளில் கடந்த காலங்களில் நடந்த ஐ.நா. வின் கண்காணிப்பு வாக்கெடுபே ஒன்றே சிறந்த வழி.

செக் மற்றும் ஸ்லோவாக்கியா என்று இரண்டு நாடுகளைப் பிரித்த செக்கோஸ்லோவாக்கியாவைப் போன்ற ஒரு தீர்வை நாம் இணக்கமாக விவாதிக்கலாம். ஆனால் சிங்களவர்கள் ஒருபோதும் சுமுக தீர்வுக்கு வரமாட்டார்கள்.

1977 ஆம் ஆண்டு முதல் தமிழர் இறையாண்மை கொண்ட நாட்டிற்காக தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்கதத்னர். கடந்த தேர்தல்களில் TULF மற்றும் TNA அதிக வெற்றிகளைப் பெற்றதற்கு இதுவே முக்கிய காரணம். TNA ஒற்றையாட்சி மாநில எக்கிய ராஜ்ஜாவை ஆதரிக்கத் தொடங்கியதால், கடந்த தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு 10க்கும் மேற்பட்ட ஆசனங்களை பாராளுமன்றத்தில் இழந்தது.

நோர்வே தூதர் எரிக் சோல்கைம், ஒரு மத்தியஸ்த பாத்திரத்தை வகிக்க விரும்புவதை இப்போது நாம் காண்கிறோம். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் மத்தியஸ்தராக மீண்டும் வரவதற்கு இரகசியமாக செயற்பட்டு வருகின்றார். நாங்கள் அதை எதிர்க்கவில்லை, ஆனால் மேற்கு தேச அரசியல் கட்டமைப்பை மேசைக்கு கொண்டு வர விரும்புகிறோம். சாத்தியமான அரசியல் தீர்வுகள் கனடா மற்றும் சுவிட்சர்லாந்தில் இருந்து நகல் எடுக்கப்படலாம் அல்லது நன்கு வரையறுக்கப்பட்ட கூட்டாட்சி, கொண் பெடெரலிசம்.

ஐ.நா கண்காணிக்கும் வாக்கெடுப்பை நடத்துவதற்கு, எங்களிடம் 3 சாத்தியமான அரசியல் தீர்வுகள் உள்ளன:

1. தமிழர் இறையாண்மை
2. மேற்கத்திய பாணி ஜனநாயகம்
3. ரணில்-சம்பந்தன் ஒப்பந்தத்தில் இருந்து தீர்வு

இதைத்தான் எங்கள் பதாகையில் எழுதியுள்ளோம்.

முழு உலகமும், குறிப்பாக இலங்கை கண்காணிப்பு குழுக்கள் (SLMM) மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் பெரும் பங்கை ஐ.நா கண்காணிக்கும் வாக்கெடுப்புக்கு நடத்த பங்கு வகிக்கும் என நம்புகிறோம்.

புலம்பெயர் தமிழ் மக்கள் எமது தமிழ் இறையாண்மை மிக்க தேசத்தில் முதலீடு செய்து அபிவிருத்தி செய்ய ஆவலுடன் காத்திருக்கின்றமையால், அரசியல் தீர்வு விடயத்தில் எமது நேரத்தை வீணடிக்க நாம் விரும்பவில்லை.

நன்றி
கோ. ராஜ்குமார், செயலாளர்
தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம். 1/1/2023



# உலக உணவுத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான உலர் உணவு விநியோகம்

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போசாக்கு குறைவான மற்றும் வறிய குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டம் மற்றும் வேல்ட் விஷன் இணைந்து முன்னெடுக்கும் உலர் உணவு பொருட்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு வியாழக்கிழமை (5) மாலை 4 மணியளவில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டி மெல் கலந்து கொண்டார்.

மேலும் மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர்கள், உலக உணவு திட்டத்தின் பிரதிநிதியும் கலந்து கொண்டார்.




மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலும் 11 ஆயிரத்து 121 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், முதல் கட்டமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆண்டாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 68 பயனாளிகளுக்கு குறித்த உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளது.

பயனாளி ஒருவருக்கு 50 கிலோ அரிசி, 5 லீற்றர் தேங்காய் எண்ணை, 20 கிலோ பருப்பு ஆகியவை வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர் (5-1-2023)

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

கனடிய செய்திகள் Canadian News

# தென்மராட்சி நிறுவனம் – கனடா இயக்குனர் சபை நடத்திய ஒன்றுகூடலு; நிகழ்வும் இராப்போசன விருந்தும்





கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் சேவைகள் வழங்கும் நிறுவனமான "தென்மராட்சி நிறுவனம் - கனடா இயக்குனர் சபை நடத்திய ஒன்றுகூடலு; நிகழ்வும் இராப்போசன விருந்தும் கடந்த திங்கட்கிழமை ஸ்காநடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக அவுஸ்த்திரேலியா வாழ் பொறியியலாளர் கருணாகரன் நடராஜா அவர்கள் கலந்து சிறப்பித்தார். நிறுவனத்தின் தலைவரும் தொழிலதிபருமான தேவதாஸ் (தாஸ்) அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில் தென்மராட்சி சேவை நிறுவனம் ஊடாக தாயகத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் பல அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார கல்வி சார்ந்த உதவிகள் வழங்குவதில் நிறுவனம் ஈடுபட்டுள்ளதாகவும் அதற்கு கனடாவில் நண்பர்களின் ஆதரவு கிட்டிவருவதாகவும் தெரிவித்தார்.

நிறுவனத்தின் போசகர் திரு. வினாசித்தம்பி துரைராஜாவும் கருத்துரை வழங்கினார்.

அங்கு கலந்து கொண்ட பலர் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் சேவைகளுக்கும் ஆதரவு தருவதாக உறுதியளித்தார்.

அங்கு கலந்து கொண்ட கனடாவில் இயங்கும் "இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா" அமைப்பின் சார்பில் 1000 டாலர்கள் தென்மராட்சி சேவை நிறுவனத்திற்கு வழங்கப்பெற்றது.

அத்துடன் தென்மராட்சி சேவை நிறுவனம்- கனடா அமைப்பின் வளர்ச்சியில் பங்கெடுத்த உறுப்பினர்கள் பலரும் கௌரவிக்கப்பெற்றனர்.

- Arjune. LJI-Uthayannews





# கனடா தமிழ் எழுத்தாளர் இணைய தலைவரும் இலக்கியவாதியுமான அகணி சுரேஷ் அவர்களின் மற்றுமொரு சாதனை முயற்சி



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய தலைவரும் சாதனை முயற்சிகளை சிலவற்றை ஏற்கெனவே வெற்றிகரமாக நிறைவு செய்தவரும் இலக்கியவாதியுமான அகணி சுரேஷ் அவர்கள் மற்றுமொரு சாதனை முயற்சி அண்மையில் வெற்றிகரமாக இடம்பெற்றது.

35 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நூல்கள் பற்றிய அறிமுக உரையை நடத்தி இலக்கியச் சாதனையை நிலை நாட்டிய அவருக்கான பாராட்டு வைபவம் ஒன்றை கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் திங்கட்கிழமை 2ம் திகதி நடத்தியது.

மார்க்கம் வீதியில் அமைந்துள்ள "தமிழ்ப் பூங்கா" கல்விச் சாலையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கலை இலக்கியம் மற்றும் கல்வி சார்ந்த பல அன்பர்களும் அறிஞர் பெருமக்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தும் வாழ்த்துரைகளை வழங்கியும் பங்கெடுத்தனர்.

அங்கு உரையாற்றிய அனைவரும் அகணி சுரேஷ் அவர்களின் அயராத உழைப்பையும் மிகுந்த ஆர்வத்துடன் இலக்கியத்தின் பல பிரிவுகளிலும் படைப்புக்களைத் தந்தவண்ணம் இயங்கும் அவரத விடா முயற்சியையும் பாராட்டினர்.

மொத்தத்தில் ஒரு கல கலப்பான இலக்கியக் கலந்துரையாடலாகவும் காலம் தாழ்த்தாமல் ஏற்பாடு செய்யப்பெற்ற ஒரு அவசிய-மான நிகழ்வாகவும் இந்த நிகழ்ச்சி அமைந்தது என்றால் அது மிகையாகாது.





**- செய்தியும் படங்களும்: சத்தியன்**

# கனடா – மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் மாணவரின் திறன்களை மேம்படுத்தும் கணிதம் மற்றும் பொது அறிவு போட்டி

கனடா-மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கமானது 1 முதல் 10 வகுப்பு வரை கற்கும் மாணவரின் விமர்சனரீதியாக சிந்திக்கும் திறன்களை மேம்படுத்த கணிதம் மற்றும் பொது அறிவு போட்டிகளை ரொறொன்ரோ (GTA), ஒட்டாவா (Ottawa), மொன்றியல் (Montreal), கோன்வால் (Cornwall) ஆகிய பிரதேசங்களில் கடந்த 15 ஆண்டுகளாக நடத்தி வருகிறது.

கொவிட் தொற்றுநோய் காரணமாக, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் தன்னார்வலர்களின் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு, இப்போட்டிகளை நிகழ்நிலை (online) வடிவில் நடத்த முடிவு செய்துள்ளனர்.

இந்தப் போட்டிக்கான பதிவுகளை 2023 தைமாதம் 02 ஆம் திகதி முதல் நிகழ்நிலை (online) மூலம் செய்யமுடியும். பதிவுசெய்யும் மாணவர்களிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் முந்நூறு பேர் மட்டும் 2023 தைமாதம் 09-15 வரை இலவச பயிற்சி தேர்வுக்கு தோற்றமுடியும். இறுதித் தேர்வு 22.01.2023 அன்று நடைபெறும்.

மேலதிக தகவலுக்கு, www.mahajana.ca என்ற இணையதளத்தைப் பார்க்கவும் அல்லது (647) 417-4447 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும், அல்லது mahajanan.contest@gmail.com க்கு மின்னஞ்சல் செய்யவும்.

பழைய மாணவர் சங்கம் - கனடா.

# தாயகத்தில் வாழும் நலிந்த நோயாளிகளின் இதய சத்திர சிகிச்சைகளுக்காக நிதி சேகரிக்கும் "நிவாரணம்" செந்தில்குமரனின் அடுத்த இசை நிகழ்ச்சி

தாயகத்தில் வாழும் நலிந்த நோயாளிகளின் இதய சத்திர சிகிச்சைகளுக்காக நிதி சேகரிக்கும் "நிவாரணம்" செந்தில்குமரனின் அடுத்த இசை நிகழ்ச்சி "எம்ஜிஆர் - 106" இசை நிகழ்ச்சி கனடா ஸ்காபுறோ நகரில் எதிர்வரும் ஜனவரி 28ம் திகதி நடைபெறுகின்றது. அனைவரும் கலந்து கொண்டு ஆதரவை வழங்கி எம்மவரின் இன்னுயிர் காப்போமாக!



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளராக என்.எம். முனவ்பர் நியமனம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளராக என்.எம். முனவ்பர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மகரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமை காரியாலயத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திரான் டி சில்வா அவர்களினால் அவருக்கு நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



இந்த நிலையில் வியாழக்கிழமை (29) வவுனியாவில் உள்ள அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாகவும், உதவிப்பணிப்பாளராகவும், பிரதிப் பணிப்பாளராகவும், கடந்த 37 வருடங்களாக சேவையாற்றி வந்த நிலையில் பதவி உயர்வு பெற்று வியாழக்கிழமை (29) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளராக என்.எம். முனவ்பர் நியமனம் பெற்று தனது கடமையை பொறுப் பேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



- மன்னார் நிருபர் (30-12-2022)



# தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த அரச பேருந்தில் இருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்பு

தலைமன்னாரில் இருந்து வெள்ளிக்கிழமை (27) இரவு கொழும்பு நோக்கி பயணித்த அரச பேருந்தில் இருந்து ஒரு தொகுதி ஐஸ் போதைப்பொருளை பேசாலை பொலிஸார் வெள்ளிக்கிழமை (30) இரவு மீட்டுள்ளனர்.

தலைமன்னாரில் இருந்து வெள்ளிக்கிழமை (30) இரவு 7.30 மணியளவில் அரச பேருந்து பயணிகளுடன் கொழும்பு நோக்கி பயணித்தது.

இதன் போது இரவு 8 மணியளவில் பேசாலை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எம்.கே. ஹேரத், உதவி பொலிஸ் பரிசோதகர் ஏ.எஸ். ஆனந்த் ஆகியோர் தலைமையிலான போலீசார் குறித்த பேருந்தை இடை நிறுத்தி சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன் போது குறித்த பேருந்தின் பின் ஆசனத்தின் இருக்கையின் கீழ் காணப்பட்ட பொதி ஒன்றை மீட்டனர். குறித்த பொதியை சோதனை செய்த போது ஐஸ் போதைப்பொருள் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 95 கிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பேசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து பின் இருக்கையில் இருந்த பயணி ஒருவர், மற்றும் சாரதி, நடத்துனர் ஆகியோர் பேசாலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைக்கு உட்படுத்தினர்.

சுமார் 2 மணித்தியாலங்களின் பின் அவர்கள் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

இதனால் குறித்த பேருந்தில் பயணித்த பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த நிலையில் தமது பயணங்களை தொடர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர் (31-12-2022)




THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 27 | 23 | 29 | 27 | 35 | 30 | 44 | 36 | 61 | 48 | 84 | 63 |
| 25 K | 37 | 33 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 | 148 | 105 |
| 50 K | 69 | 62 | 88 | 74 | 103 | 92 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 240 | 406 | 318 | N/A | N/A |
| 200 K | 260 | 231 | 338 | 282 | 398 | 353 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 | 450 | 296 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | N/A | N/A | N/A | N/A |

INVESTMENTS




Protect
once
helps your life



LIFE INSURANCE
ஆயுட் காப்புறுதி
Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416-728-5772
Office : 416-519-3896
thana7@gmail.com www.thana.ca
fax : 647-547-8147
80 Nashndene Road ,#D218, Scarborough,ON,M1V 5E4

# கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் சட்டவிரோத ஆயுதங்கள் மீட்பு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



கிளிநொச்சி மாவட்ட சுற்றுவட்ட காரியாலயம், வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் கிளிநொச்சி அக்கராயன் ஜெயபுரம் பகுதியில் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட சுற்றுவட்ட காரியாலயம், வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு குறித்த பகுதியில் வன விலங்குகளை வேட்டையாட பயன்படுத்தும் சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அங்கிருந்த சட்டவிரோத ஆயுதங்களை கைப்பற்றி இருந்தனர்.

இதேவேளை சட்டவிரோத ஆயுதங்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அதே பகுதியை சேர்ந்த 62 மற்றும் 68 வயதேயான சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சுற்றுவட்ட காரியாலயம் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட இருவரையும் 03-01-2023 அன்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

# வடக்கு கிழக்கில் அனைத்து தமிழ் பேசும் மக்களையும் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ள பகிரங்க அழைப்பு




வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் "ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஸ்டியை வலியுறுத்துவதற்கு" அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் திரண்டு செயல்படக் கோரி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களை ஒன்றிணைத்து கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

"ஒன்றிணைவோம் ஒருமித்த குரலில் உரக்கச் சொல்வோம்" எனும் தொனிப் பொருளில் வியாழக்கிழமை (5) தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.




வடக்கு - கிழக்கில் உள்ள சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

வியாழக்கிழமை (5) காலை 9 மணிக்கு திருகோணமலை மக்கேசர் விளையாட்டு அரங்கம் முன்பாகவும், மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாகவும், அம்பாறை முதல் நாள் திருக்கோயில் வைத்தியசாலை முன்பாகவும் மற்றும் ஏனைய நாட்கள் கல்முனை பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோவில் முன்பாகவும் இடம்பெற்று, அதே நேரம் வவுனியா நகர் பகுதி, யாழ்ப்பாணம் ஏ-9 நாவட் குழி சந்தி மற்றும் மன்னார் நகர சுற்றுவட்டம் அருகாமையிலும், கிளிநொச்சி ஏ9 பழைய வைத்தியசாலை முன்பாகவும், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவும் இடம்பெற்றன.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர் (04-01-2023)

# ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் திருமதி. கன்னி விக்னராஜா (Kanni Wignaraja) உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு புதன்கிழமை (04) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களை சந்தித்தது.

நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பாராட்டிய உதவிப் பொதுச் செயலாளர், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் தொடரும் என்றும் உறுதியளித்தார்.

இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இங்கு விசேடமாக கலந்துரையாடப்பட்டது டன், இலங்கைக்கு நீண்ட கால அடிப்படையில் முன்னேறுவதற்கும் நாட்டின் எதிர் காலப் பயணத்தை உறுதி செய்வதற்கும் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும் என்பதை உதவிப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட தூதுக்குழு ஏற்றுக்கொண்டது.

பாராளுமன்ற அரசியலமைப்பு சபையை ஸ்தாபித்தல் உள்ளிட்ட நாட்டின் அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளுடன் நடத்தும் கலந்துரையாடல் என்பன தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதிநிதிக் குழுவுக்கு விளக்கமளித்தது டன், தூதுக்குழு அந்த நடவடிக்கைகள் தொடர்பில் தமது பாராட்டுகளை தெரிவித்தது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொழம்பகே, உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

- மன்னார் நிருபர் (04-01-2023)

# முன்னாள் பரிசுத்த பாப்பரசர் 16 வது பெனடிக்ட் திருத்தந்தைக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக கொழும்பு அப்போஸ்தலிக்க தூதரகத்திற்கு ஜனாதிபதி விஜயம்



முன்னாள் பரிசுத்த பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ட் திருத்தந்தை இறைபதமேந்தியதையொட்டி அவருக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதன்கிழமை (04) முற்பகல் கொழும்பிலுள்ள அப்போஸ்தலிக்க தூதரகத்திற்கு விஜயம் செய்தார்.

இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் புனித பிரையன் உடேக்வே ஆண்டகையை சந்தித்த ஜனாதிபதி, அவருடன் சிறு உரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட நூலில் குறிப்பொன்றையிட்டதுடன், பதினாறாம் பெனடிக்ட் பரிசுத்த பாப்பரசரின் புகைப்படத்திற்கும் அஞ்சலி செலுத்தினார்.

(04-01-2023)

# மன்னார் அச்சங்குளம் கடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளை பிடித்த 9 பேர் கடற்படையினரால் கைது



மன்னாரில் சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளை பிடித்த 09 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

வியாழக்கிழமை (5) அதிகாலை மன்னார் அச்சங்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

குறித்த நடவடிக்கையின் மூலம் டைவிங் கியர், 01 டிங்கி படகு மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட 168 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பல்வேறு வகையான சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடுப்பதற்காக மன்னார் தீவைச் சூழவுள்ள கரையோர மற்றும் கடற்பரப்புகளில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கடற்படை தெரிவித்துள்ளது.



கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் வங்காலை பகுதியைச் சேர்ந்த 25 வயதுக்கும் 58 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களின் உடைமைகள் சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

(5-1-2023)

# கனடா இந்து

CANADA HINDU

Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648

# துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை

**றொறன்ரோவில் அருட்பிரசித்தம் பெற்ற திருக்கோவிலான துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது. ஜனவரி 20ம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்து, பூர்வாங்கக்கிரியைகளும், யாகபூஜைகளும் ஜனவரி 21ம் திகதி சனிக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்று, ஜனவரி 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:15 மணிக்கு பாலஸ்தாபனம் இடம் பெறும்.**

கனடாவில் மிகப்பெரும் கும்பாபிஷேகம் 2001ம் ஆண்டு, துர்க்கேஸ்வரத்தில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. 2023ம் ஆண்டு மீண்டும் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு ஏதுவாக, பாலஸ்தாபனத்தை 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்த ஆலயத்தினர் தீர்மானித்துள்ளனர். பாலஸ்தாபனம் பற்றிய விளக்கத்தினை ஆலய பிரதமகுருக்களிடம் கேட்டபோது,

"கடந்த காலங்களில் இவாலயத்தில் நடைபெற்ற பூஜைகள், ஹோமங்கள் மற்றும் அருட்பெருவிழாக்களால் அதிஅருட்சக்தி பெற்று விளங்கும் விக்கிரகங்களில் உள்ள சக்தியை மந்திரபூர்வமான கிரியைகளால் கும்பங்களில் வரவழைத்து, அதன் பின்னர் சன்னிதானங்களில் உள்ள விக்கிரகங்களை பாலாலயம் என அழைக்கப்பெறும் சிறு ஆலயத்தில் ஸ்தாபித்து, கும்பங்களை அபிஷேகித்து தெய்வங்களை வழிபடுவதற்கான விஷேட ஏற்பாடே பாலஸ்தாபனமாகும். பாலஸ்தானம் நிகழ்ந்த பின்னர், ஆலயத்தில் சன்னிதானங்கள் மீளப்புதுப்பிக்கப்பெறும். புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பெறும். இவ்வாறாக, மூன்றரை மாதங்கள் நடைபெற்று பின்னர் மே மாதம் 4ம் திகதி, 2023ம் ஆண்டு வியாழக்கிழமை மஹாயாக மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்"

என்று சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள் தெரிவித்தார். ஆலயத்தில் ஏற்கெனவே புதிய வர்ணம் தீட்டும் திருப்பணிகள் ஆரம்பித்துவிட்டன. ராஜகோபுரத் திருப்பணிகள் பூர்த்தியுறும் நிலையில் உள்ளன. துர்க்கேஸ்வரம் கும்பாபிஷேகம் பற்றி பக்தர் ஒருவரிடம் கேட்டபோது,

"பக்தர்கள் அம்பாளின் திருவருளைப் பெறவேண்டும் என்பதற்காக பல சிறப்பான ஹோமங்களையும் வழிபாடுகளையும் இவ்வாலயம் தொடர்ந்து செய்துவருகிறது. எதையுமே மேன்மையாகவும் மகத்துவம் மிளிரவும் செய்யும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகமும் அவ்வாறே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை"

எனக் குறிப்பிட்டார்.

### துர்க்கேஸ்வரம் மஹாகணபதிப் பெருமானுக்கு

## விநாயக சஷ்டி வழிபாடு

**08-12-2022 வியாழன் முதல் 28-12-2022 புதன் வரை**

துர்க்கேஸ்வரத்தில் விநாயகர்சஷ்டி விரதத்தினை முன்னிட்டு, அலங்கார மண்டபத்தில் உயர்பீடத்தில் பஞ்சமுகவிநாயகர் வீற்றிருக்க, கும்பங்கள் நிலை நிறுத்தி, விம்பத்திலும் கும்பத்திலும் அருள் நிறைத்து, விநாயகருக்குப் பிரீதியான நைவேத்தியங்கள் படைத்து, அறுகினாலும், மலர்களினாலும் அர்ச்சித்து வழிபாடுகள் நிகழவிருக்கின்றன.

தினமும் மாலை 6.30 மணிக்கு கும்பபூஜை, சங்கல்ப்பம் நிகழ்ந்து, தொடர்ந்து மஹா கணபதிக்கு அபிஷேகம் நடைபெறும். இரவு 7.31 மணிக்கு விஷேட பூஜை, வழிபாடுகள் நிகழ்ந்து, தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் துர்க்கேஸ்வரம் றொறன்ரோப் பெரும் பிள்ளையாருக்கு விஷேட வழிபாடுகள் நடைபெற்று, சுவாமி வீதிவலமும் அருட் தரிசனமும் பக்தர்களுக்கு கிட்டவுள்ளது.

அருள்நிறை துர்க்கேஸ்வரம் கணபதியை வழிபட்டு அருள்பெற நித்தமும் பக்தர்கள் துர்க்கேஸ்வரத்துக்கு வருகை தருகின்றனர். இவ்விழா டிசெம்பர் 28ம் திகதி புதன்கிழமை பூர்த்தியாகும்.

**1-1-2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு துர்க்கேஸ்வ்ரத்தில் "கனடா TMS"**
**V.S.தெய்வேந்திரன் தலைமையில் கனடாக் கலைஞர் வழங்கும் பக்திப் பாமாலை**

உ
சிவமயம்

ராமநாத இந்துமத கிரியாபீடம்

*திருமணம் - வீடு குடிபுகுதல் - ருது சாந்தி பூஜை - புண்யாகவாசனம் - 60ம் கல்யாணம் (சஷ்டியாப்த பூர்த்தி) - 31ம் நாள் துடக்கு கழித்தல் - வீட்டுக்கிருத்தியம் (திவசம்) - ஆட்டத்திவசம் - மாசியம் - சிரார்த்தம் - புரட்டாதி மாளையம - கணபதி ஹோமம் - லட்சுமி ஹோமம் - நவக்கிரக ஹோமம் - தோஷ நிவர்த்தி பூஜைகள் - சத்தியநாராயண பூஜை - வளைகாப்பு மற்றும் அனைத்து இந்துமத சேவைகளும் பெற்றுக்கொள்ளலாம்*

இன்னும் பல ஆண்டுகளுக்கான பஞ்சாங்கத்தினை நாம் கணித்து வைத்திருப்பதனால் திருமண மண்டபங்களை முன்கூட்டியே ஒழுங்கு செய்ய முகூர்த்தங்களை நம்மிடம் கணித்துக் கொள்ளலாம்

வைபவங்களுக்கான மங்கள இசை ஏற்பாடும் செய்து தரப்படும்

647-927 1434 ராம்ஜி ஐயா 647-618 7755

# மன்னாரில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆயர் தலைமையில் இடம்பெற்ற புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி – பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



மன்னார் மறை மாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் சனிக்கிழமை (31) இரவு 11.45 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் போது ஆலயத்திற்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பை வழங்கியுள்ளனர்.

இதன் போது பல ஆயிரக்கணக்கான மக்கள் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியில் கலந்து கொண்டிருந்தனர்.

புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியின் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தனது உரையில் தெரிவிக்கையில், இந்த புதிய ஆண்டிலே நீங்கள் எத்தனையோ சிந்தனைகளோடு புது திட்டங்களோடு இவ்வாண்டில் நீங்கள் சென்ற வருடம் அகப்பட்டிருந்த துன்பங்களிலிருந்து விடுபட்டு எமது நாட்டிலே பொருளாதார நிலை மாறி மக்கள் ஒரு நெருக்கடியான நிலையில் வாழாமல் விடுதலை பெற்று ஒரு சாதாரண ஆண்டாக இந்த வருடம் உங்களுக்கு இருக்க வேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

சென்ற ஆண்டிலே பல்வேறு பிரச்சினைகளால் நாங்கள் துன்பப்பட்டோம். இனப் பிரச்சினைகள், மொழிப் பிரச்சனைகள் என மக்களை பல விதத்திலும் தாக்கிக் கொண்டிருந்தது.

அரசியலிலும், பொருளாதாரத்திலும் பெரிய நெருக்கடிகள் இருந்து வந்தது. புத்தாண்டிலே உங்களுக்கு ஒரு விடுதலை கிடைக்கப்பெற்று நீங்கள் சுபிட்சமாக வாழவும் இறை ஆசீர் நிரம்ப கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்ந்திட இறைவன் உங்களுக்கு அருள வேண்டும்.

இந்த ஆண்டிலேயே நீங்கள் விடுதலை பெற்ற மக்களாக ஒரு சுதந்திரத்தை கொண்டாடக் கூடும் மக்களாக வாழ இறைவன் உங்களுக்கு அருள வேண்டும்.

இலங்கை நாடு சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் இவ்வருடம் நிறைவு பெறும்.

ஆனால் மக்களுக்கு எப்படியான சுதந்திரம் இருந்தது என்று உங்களுக்கு தெரியும். ஆகையினால் அனைத்து மக்களுக்கும் உண்மையான விடுதலை கிடைக்கப்பெற்று அவர்கள் சுதந்திரத்துடன் அவர்களுடைய உரிமைகள் எல்லாம் கிடைக்கப்பெற்று சமுதாயத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டு இலங்கை நாடு ஒரு முன்னேற்றத்தை நோக்கி செல்ல இறைவன் எமது நாட்டில் இருக்கும் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து, மக்களுக்கு ஒரு சிறப்பான ஆண்டை தர வேண்டும் என்று நான் ஆசீக்கின்றேன்.

எனவே சகோதர சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (01-01-2023)**





# எந்த அரசியல் தீர்வும் சிங்களத்தின் இனவழிப்பில் இருந்து தமிழர் தேசத்தைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும் !

## - புத்தாண்டுச் செய்தியில் பிரதமர் வி. உருத்திரகுமாரன்

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சிங்களத்தின் இனவழிப்பில் இருந்து ஈழத்தமிழர் தேசம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய அரசியல், பொருளாதார, பாதுகாப்பு எற்பாடுகளுடன் இறுகப் பிணைக்கப்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையினை கருத்தில் கொண்டு அரசியல் தீர்வானது ஈடுசெய்நீதியின் அடிப்படையில், ஈழத்தமிழ் தெரிவு செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு அமையாத ஏற்பாடு எதுவும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையப் போவதில்லை என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி 4ம் திகதிக்கிடையில் தீர்வு காணப்படும் என்ற அறிவிப்பு சிறிலங்கா அரச தலைவரால் வெளியிடப்பட்டமை சில மட்டங்களில் ஆரவாரங்களையும் விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளமையினை அவதானிக்க முடிவதோடு, இது கேலிக்கும் நகைப்புக்கும் உரியதோர் அறிவிப்பு என்பதனை அரசியல் புரிந்தோர் அனைவரும் அறிவர் எனக் தனதறிக்கையில் குறிப்பிட்டு பிரதமர் வி. உருத்திரகுமாரன், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையினை எவ்வளவு தரம் தாழ்த்தி வெளிப்படுத்தவே சிறிலங்கா அரசுத் தலைவர் விரும்புகிறார் என்பதனை இவ் அறிவித்தல் ஊடாக நாம் புரிந்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் வி. உருத்திரகுமாரன் அவர்கள் புத்தாண்டு அறிக்கையின் முழுவடிவம்:

ஈழத் தாயக, தமிழக, உலகத் தமிழ் உறவுகளுக்கு புத்தாண்டு நல்வாழ்த்துகளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்வதில் நான் பேருவகையடைகிறேன்.

புத்தாண்டின் மலர்வு எப்போதும் மக்களுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தரக் கூடியது. இன்று பிறந்துள்ள ஆங்கிலப் புத்தாண்டைத் தொடர்ந்து, தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் மலரும் தமிழர் புத்தாண்டை தமிழ்மக்கள் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற நம்பிக்கையுடன் வரவேற்று தமது வாழ்வை புதிய உற்சாகத்துடன் ஆரம்பிப்பார்கள். மீண்டும் தொடங்கும் மிடுக்குடன், சவால்கள் எதனையும் எதிர்கொள்ளும் துணிச்சலுடன் புத்தாண்டை எதிர்கொள்ளும் பண்பாட்டு மரபு தமிழ் மக்களுக்கு உள்ளது. இந்தப் பண்பாட்டுத்தளத்தில் நின்று புத்தாண்டில் உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களின் வாழ்வு மேலும் சிறப்பாக அமைய எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்து சென்ற 2022ம் ஆண்டு உலகம் தழுவியரீதியிலும் இலங்கைத்தீவிலும் அதிர்வுகளை ஏற்படுத்திய ஆண்டாக அமைந்தது. ரஸ்ய - உக்ரேனியப் போர் உலகலாவியரீதியில் மக்களின் வாழ்விலும், உலக அரசியல் ஒழுங்கிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள ஒன்றாக அமைந்துள்ளது. இலங்கைத்தீவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பெரும் மக்கள் போராட்டத்துக்கு வித்திட்ட போதும் சிங்கள ஆளும் வர்க்கம் ஆள்மாற்றத்தின் ஊடாகத் தனது நலன்களை நிலைநிறுத்திக் கொண்டது.

நான் எனது கடந்த மாவீரர் நாள் அறிக்கையில் சுட்டிக் காட்டியபடி உலக அரசியல், ஒற்றைமைய ஒழுங்கில் இருந்து விடுபட்டு இரட்டை மைய அரசியல் ஒழுங்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இரட்டை மைய அரசியல் ஒழுங்கு எமக்கு வாய்ப்பான சந்தர்ப்பங்களைத் தரக்கூடியது. இதே வேளை நாம் இன்னொரு விடயத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும். உலக அரசியல் ஒழுங்கு அரசுகளை மையப்படுத்தியே சுழல்கிறது. அரசுகள் தமது நலன்களை அடைந்து கொள்வதற்காக அம்மணமாக உலவக் கூடியவை என்றொரு கூற்றும் உண்டு. இச் சூழலில் அரசற்ற தேசமாகவுள்ள ஈழத்தமிழர் தேசம் தனது தன்னாட்சி உரிமையினை நிலைநிறுத்திக் கொள்ள பல்வேறு சவால்களை எதிர் கொள்ள வேண்டி வரும் என்பதனை நாம் மறந்து போதல் ஆகாது.

சிங்கள அரசு இன்று உள்நாட்டுரீதியாகவும் அனைத்துலகரீதியாகவும் பலவீனமான அரசாக மாறியுள்ளது. இருந்தும் இதனை முற்றிலும் தோல்வியடைந்த ஓர் அரசாக மாறி விடாது பாதுகாக்கும் அக்கறை சில பலம் வாய்ந்த அனைத்துலக அரசுகளிடம் உள்ளது என்பதனையும் அவதானிக்க முடிகிறது. இதன் காரணமாக ஆட்சியாளர்களின் முகங்களை மாற்றி அரசை பாதுகாக்கும் முயற்சி இப்போது நடைபெறுகிறது. இருந்த போதும் இலங்கைத்தீவின் நெருக்கடி ஆழப்புரையோடியிருப்பதால் சிறிலங்கா அரசு தொடர்ந்தும் பல்வேறு நெருக்கடியினை எதிர்கொள்ளும் நிலை இன்னும் நீண்ட காலத்துக்குத் தொடரும் என்ற கணிப்பு நிபுணர்கள் மட்டத்தில் உண்டு.

இலங்கைத்தீவின் தேசிய அரசியற் பிரச்சினைக்கு 2023ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதிக்கிடையில் தீர்வு காணப்படும் என்ற அறிவிப்பு சிறிலங்கா அரச தலைவரால் வெளியிடப்பட்டமை சில மட்டங்களில் ஆரவாரங்களையும் விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளமையினை அவதானிக்க முடிகிறது. இது கேலிக்கும் நகைப்புக்கும் உரியதோர் அறிவிப்பு என்பதனை அரசியல் புரிந்தோர் அனைவரும் அறிவர். சிறிலங்கா அரச தலைவருக்கும் இது நன்கு தெரியும். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையினை எவ்வளவு தரம் தாழ்த்தி வெளிப்படுத்த அவர் விரும்புகிறார் என்பதனை இவ் அறிவித்தல் ஊடாக நாம் புரிந்து கொள்ள முடியும்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை அடிப்டையில் சிங்கள தேசத்தின் இனவழிப்பில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஈழத்தமிழர் தேசம் ஆரம்பித்த போராட்டத்தின் விளைவாகத் தோற்றம் பெற்றதாகும். இதனால் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சிங்களத்தின் இனவழிப்பில் இருந்து ஈழத்தமிழர் தேசம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய அரசியல், பொருளாதார, பாதுகாப்பு எற்பாடுகளுடன் இறுகப் பிணைக்கப்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையினை கருத்தில் கொண்டு அரசியல் தீர்வானது ஈடுசெய்நீதியின் அடிப்படையில் அடிப்படையிலும், ஈழத்தமிழ் தெரிவு செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு அமையாத ஏற்பாடு எதுவும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையப் போவதில்லை.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதற்கு ஈழத்தமிழர் தேசத்தின் இருப்பும், தாயகப் பிரதேசமும், சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வின் முதற்கட்டமாக போரினால் சீரழிக்கப்பட்ட தமிழர் தாயகத்தை தமிழ் மக்களே மீளக் கட்டியெழுப்பும் அதிகாரம் கொண்ட இடைக்கால முன்னேற்பாடு செய்யப்படுதலும் அவசியம். திம்பு பேச்சுவார்த்தைக் காலம் தொட்டு விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட 2002-2006 ஆம் ஆண்டு காலப் பேச்சுக்கள் வரை இவற்றை அடையாளப்படுத்தக்கூடிய பல முன்னுதாரணங்களைக் கொண்டவை. இவை தமிழர் தரப்பின் எப் பேச்சுவார்த்தை முயற்சிகளையும் வழிநடாத்தக்கூடிய வரலாற்று வழிகாட்டிகளாக உள்ளன.

இதனால், தமிழர் தலைவர்கள் எவரும் இந்த அடிப்படைகளைக் கைவிட்டு தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என நம்புவதோ அல்லது கிடைக்கக் கூடியவற்றைப் பெறுவோம் எனச் சிந்திப்பதோ எம்மை நாமே பலவீனப்படுத்தவதாக அமைந்து விடும். எமது அடிப்படைக் கோட்பாடுகளை சிங்கள தேசம் ஏற்றுக் கொள்ள மறுப்பின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதற்கான சூழல் நாடடில் இல்லை என்பதனை வெளிப்படுத்தி சாத்தியமான வழியிலெல்லாம் நமது போராட்டத்தை நாம் தொடர வேண்டும். இதை விடுத்து நடைமுறைச் சாத்தியம் எனக் கூறி சிங்களத்தின் அரசியல் சூழ்ச்சிக்குள் தமிழர் தலைவர் எவரும் சிக்கிக் கொள்வார்களேயானால் அவர்கள், மாவீரகளைத் தம் நெஞ்சக்கூட்டில் ஏற்றி வைத்திருக்கும் நமது மக்களால் நிராகரிக்கப்படுவார்கள் என்பதனையும் இவ் வருட புத்தாண்டுச் செய்தியாக வெளிப்படுத்த விரும்புகிறேன்.



2023ம் ஆண்டு ஈழத்தமிழர் தேசம், தமிழ்நாடு, புலம்பெயர் மற்றும் உலகத் தமிழர்கள் இணைந்த வகையில் செயற்பட்டு தமிழீழ மக்களின் விடுதலைப் பயணம் மேலும் வலுவுடன் முன்னேற உழைப்போம் என உறுதி பூணுவோமாக.

நன்றி.

தமிழரின் தலைவிதி தமிழர் கையில்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

இவ்வாறு தனது புத்தாண்டுச் செய்தியில் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்

# தமிழ்த் தேசியத்தை நேசிப்போரிடம்.......!



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• தமிழ் மக்களுடன் கைகோர்த்துப் பயணிக்க எவரும் இல்லை.

• தாயகத்திலும் புலத்திலும் பிரிந்து நின்று அரசியல் செய்கின்றனர்.

• தாமே பாதை வெட்டிப் பயணிக்க வேண்டிய நிலையில் தமிழ் மக்கள்.

போர் முடிந்தவுடன் அதாவது விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததுடன் எல்லாம் முடிந்துவிட்டன என்ற தோற்றப்பாட்டை தென்னிலங்கை அரசியல் சக்திகள் உருவாக்கின.

• "வெற்றி மமதையில்" வீழ்ந்தது தென்னிலங்கை

போர் தந்த "வெற்றி மமதை" தென்னிலங்கை மக்கள் "வெற்றிப் போதை"யில் வழங்கிய அதீத மக்கள் ஆணை என்பன தாம் எதையும் செய்யலாம் தாம் சட்டத்திற்கு மேலானவர்கள் என்ற நிலைப்பாட்டில் ஆளும் வர்க்கம் செயற்படத் தொடங்கியது. குறிப்பாக ராஜபக்ஷ அணியினர் நாட்டையே மக்கள் தமக்கு எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்ற பாணியில் செயற்பட்டதன் விளைவு நாடும் மக்களும் மீள முடியாத நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர்.

• கடவுளாலும் காப்பாற்ற முடியாது

தமிழ் மக்களை தென்னிலங்கையிடம் இருந்து கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென தந்தை செல்வா அன்று குறிப்பிட்டார். ஆனால் இன்று இலங்கையையும் ஒட்டு மொத்த மக்களையும் கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்ற நிலையை தென்னிலங்கை அரசியல்வாதிகள் உருவாக்கிவிட்டனர். நாடு மீள முடியாத நெருக்கடி நிலைக்குள் வீழ்ந்து கிடக்கும் இவ்வேளையிலும் ஆளும் அரசியல்வாதிகளினதும் அவர்கள் சார்ந்த அணியினரதும் ஊழல்களும் கொள்ளையும் சூறையாடுதலும் சாகா வரம்பெற்று நாட்டையும் மக்களையும் வதைத்துக் கொண்டிருக்கின்றது.

இந்த ஒரு சூழ்நிலையில் "மாற்றம்" வேண்டும் தமக்கென ஒரு லீ குவான் யூ தேவையென தென்னிலங்கை எதிர்பார்க்க இலங்கையின் ஆளும் வர்க்கம் சளைக்காது "ஹிட்லர்களையும் நாஜிகளையுமே" பிரசவித்துக் கொண்டிருக்கின்றது.

• ஆட்சி அதிகாரத்துக்கான போட்டிக் களமாக தென்னிலங்கை

அது மாத்திரமல்ல

சிங்களத் தலைமைகள் மீண்டும் பிரிந்து நின்று ஆட்சி அதிகாரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன. தென்னிலங்கையின் "சிஸ்டம் சேன்ஜ்" ஊழலுக்கெதிரான போர் என்பதெல்லாம் பேசு பொருளாக்கப்பட்டுள்ளது மாத்திரமல்ல நாஜிகளும் ஹிட்லர்களும் கை கோர்த்துக் கொண்டு ஆட்சியைக் கொண்டு நடத்துகின்றனர். மறுபுறம் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கான போட்டிக் களமாக தென்னிலங்கை அரசியல் களம் திறக்கப்பட்டுள்ளது.

இந்த அரசியல் களத்தில் "சிஸ்டம் சேன்ஜ்" ஊழலுக்கெதிரான போர் என முழக்கமிடுபவர்களையும் கலந்து கொள்ளுமாறு பாரம்பரிய அரசியல்வாதிகள் அழைப்புவிடுத்துள்ளனர். மொத்தத்தில் "சிஸ்டம் சேன்ஜ்" ஊழலுக்கெதிரான போர் என்பதெல்லாம் ஆளும் ரணில் - ராஜபக்ஷ அரசியல் அணியினருக்கு எதிரான அரசியல் சக்திகளின் கைகளில் பிரமாஸ்திரமாக அடைக்கலமாகியுள்ளது.

• "ஆரகலயாக்கள்" வெறுங்கையுடன் வீழ்ந்து கிடக்கின்றனர்.

தென்னிலங்கையின் "சிஸ்டம் சேன்ஜ்" கருத்தியலுக்குச் சொந்தக்காரர்கள் தமது பிரமாஸ்திரத்தைப் பறி கொடுத்த நிலையில் வெறுங்கையுடன் வீழ்த்தப்பட்டுக் கிடக்கின்றனர்.

இதன்விளைவு பாராளுமன்றத்தில் நடக்கும் சில நடவடிக்கைகள், ஆளும் வர்க்கம் தாம் சட்டத்திற்கு மேலானவர்கள் என்று நம்பும் சட்டத்தின் ஆட்சிக்கு தொடர்ந்தும் வழிவகுப்பதாக அமைந்துள்ளது.

பொறுப்புக்கூறல் பிரச்சினைகளைக் கையாள்வதில் எவருக்கும் அக்கறை இருப்பதாக தெரியவில்லை. அது தமிழர் விவகாரத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது இன்று தென்னிலங்கை பேசுகின்ற "சிஸ்டம் சேன்ஜ்சாக" இருக்கலாம் அணைத்து விடயங்களுமே ஏறெடுத்துப் பார்க்கத்தக்க விடயங்களாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாத விடயங்களாக உள்ளன.

• நாட்டு மக்களை தண்டிக்கும் அரசியல் கலாசாரம்

- பொருளாதார நெருக்கடி மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளுக்கான தீர்வு மார்க்கம் குறித்த ஒளிக் கீற்றைக் காண முடியாதிருக்கின்றது.

- மொத்தத்தில் நாட்டையும் மக்களையும் படுகுழிக்குள் தள்ளியவர்கள் தொடர்ந்தும் எஜமானர்களாக ஆட்சியில் இருந்து கொண்டு பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக்களை தண்டிக்கும் அரசியல் கலாசாரம் தலைதூக்கியுள்ளது.

- இதுபற்றி பேசினால் அது பயங்கரவாதமாக முத்திரை குத்தப்படும் அரசியல் பயங்கரவாதமாக தலைதூக்கியுள்ளது.

- உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற இத்தகைய பிரச்சனைகளை அங்கீகரித்து, "நம்மிடையே அமைதியாக பதுங்கியிருக்கும் தீமைகளை கண்டனம் செய்வது போதாது...அதிகமான கண்டனங்கள் நாம் பிரச்சனையைத் தீர்த்துவிட்டோம் என்ற மாயையைக் கொடுக்கலாம்" என்று போப் தனது நத்தார் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

- அத்தகைய ஒரு நிலையே இலங்கையில் இன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவைகளுக்கு எதிரான தீர்க்கமான முடிவுகளை எடுக்க மக்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. நாடு தேர்தலை சந்திக்கும்போதே மக்கள் உறுதியான முடிவினை நோக்கி நகரக் கூடியதாக இருக்கும்.

• தென்னிலங்கையில் மாற்று அரசியல் தலைமை?

துரதிஸ்டவசமாக தென்னிலங்கையில் மாற்று அரசியல் தலைமைகளை கண்ணுக்கெட்டிய தூரம்வரை காண முடியவில்லை. "புதிய மொந்தையில் பழைய கள்" என்ற போர்வையிலேயே தென்னிலங்கையில் அரசியல் சக்திகள் நடமாடிக் கொண்டிருக்கின்றன. இவை அணைத்தும் "ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளே". நாடு உருப்பட வேண்டுமாயின் "பழைய கள்" அல்ல புதிய பாணியிலான அரசியல் சக்திகளின் அரசியல் பிரவேசமே தேவை. இதனை தென்னிலங்கை மக்களும் மாற்றத்தை நோக்கி அணி திரண்டுள்ள சக்திகளும் உருவாக்க முன் வரவேண்டும்.

• தென்னிலங்கையில் தேர்தலே பேசுபொருள்.

தென்னிலங்கையில் தற்போது தேர்தல்குறித்தே பேசு பொருளாக இருக்கின்றது. "அரகலய புரட்சி" தோற்கடிக்கப்பட்டதையடுத்து தேர்தல் கள பலப் பரீட்சைக்கு தென்னிலங்கை தயாராகிக் கொண்டிருக்கின்றது. இந்த தேர்தல் பலப் பரீட்சையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 75 வது; சுதந்திர தினத்திற்குள் அதாவது 2023 பெப்ரவரி 4 ஆம் திகதிக்குள் இன விவகாரத்துக்கான தீர்வு என்ற தனது அஸ்திரத்தை தென்னிலங்கை அரசியல் சக்திகளின் மற்றும் தமிழ்த் தலைமைத்தவங்களின் முன்னிலையில் வீசியுள்ளார்.

நாடு தேர்தலை எதிர் நோக்கியுள்ள நிலையில் குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலை நோக்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நகர்வானது தமிழ் வாக்குகளை எதிர் பார்த்துக் காத்திருக்கின்ற தென்னிலங்கையின் பெரும்பாலான அரசியல் சக்திகளை தீர்வுக்கு "ஆமாம்" போட வைத்துள்ளது.

• ரணில் விக்ரமசிங்கவிற்கு பச்சைக் கொடி

வழமையாக தென்னிலங்கை அரசியல் சக்திகள் ஆட்சி அதிகாரத்திற்காக பிரிந்து நின்று போராடுபவர்கள் தமிழர் விவகாரத்தில் ஒன்றுபட்டு எதிர் நிலைப்பாட்டில் இருப்பர். ஆனால் தற்போது தென்னிலங்கையின் பெரும்பாலான அரசியல் சக்திகள் தேர்தலை எதிர் நோக்கிய நிலையில் ரணில் விக்ரமசிங்கவின் தீர்வு நோக்கிய திட்டத்திற்குப் பச்சைக் கொடி காட்டியுள்ளனர்.

அதே வேளையில் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு கணிசமான எதிர்ப்பும் உள்ளது. அதுமாத்திரமல்ல பேராசிரியர் திஸ்ஸவிதாரன போன்ற தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ்த் தலைமைகளுடன் தமிழர் விவகாரத் தீர்வுகுறித்து பேசத் தயார் என அறிவித்துள்ளனர்.

• தமிழ்த் தலைமைகள் பிரிந்து நின்று அரசியல் செய்கின்றனர்.

ஆனால் துரதிஷ்டவசமாக தமிழர் விவகாரத்தில் ஒன்றுபட வேண்டிய தமிழ்த் தலைமைகள் பிரிந்து நின்று அரசியல் செய்கின்றனர்.

• போரின்போது பார்வையாளர்களாக இருந்தவர்கள் 2009 ஆம் ஆண்டு போரின்போது பார்வையாளர்களாக இருந்தவர்கள்தான் இன்றைய தமிழ்த் தலைமைத்துவங்கள். 6வது திருத்தச்சட்டத்தை மீறி இவர்களால் ஏதும் செய்ய முடியுமா என்பதற்கு அவர்களே பதில் கூறவேண்டும். நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமானத்தின்போது இவர்கள் மேற் கொண்ட சத்தியப்பிரமானமும் இவர்களுக்கு மறந்திருக்காது. எனவே 6வது திருத்தச்சட்ட கவசத்திற்குள் தமிழ்த் தலைமைகளின் வீரவசனம் எடுபடாது.

எனவே பிரிந்து நின்று நாடாளுமன்ற மாகாண சபைகளுக்கான நாற்காலிகளுக்காக தமிழ்த் தலைமைகள் நடத்தும் அரசியல் நாடகம் போதும். இதற்குப் பிறகாவது மக்களுக்கான அரசியலை நடத்த முன் வருவதே சிறந்தது.

• தென்னிலங்கை பக்கம் பந்து

இப்பொழுது பந்து ஜனாதிபதி ரணில் விகரமசிங்க - ராஜபக்ஷ அணியினரின் கைகளில் உள்ளது. அதற்கு பச்சைக் கொடி காட்டி நிற்கின்ற தென்னிலங்கை சக்திகளுக்கும் அதில் பங்குள்ளது. இவர்கள் இணைந்து தரப்போகும் தீர்வு என்னவென்று பார்ப்போம். ஏனெனில் தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் அதீத நம்பிக்கை கொண்டவர்கள் குறைவு. ஆனால் பரவலான எதிர்பார்ப்பு உள்ளதை மறுப்பதற்கில்லை.

இன விவகாரத் தீர்வு நோக்கிய பயணத்தில் முன்னைய தலைவர்கள் ஏறக்குறைய 75 வருடங்கள் தோல்வியடைந்தாலும் அடுத்த வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் சாதிப்பேன் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறுகின்றார். அது ரணில் விக்ரமசிங்கவைப் பொருத்தவிடயம்.

• தமிழ் மக்கள்.

- தமிழ் மக்களைப் பொருத்து புதிய அரசியல் பாதை வெட்டி பயணிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

- தற்போதைய தமிழ்த் தலைமைகளில் ஒரு பகுதியினர் மறைமுக இணக்க அரசியல் நடத்துபவர்களாகவும் மறு பகுதியினர் வெளிப்படையான இணக்க அரசியல் நடத்துபவர்களாகவும் உள்ளனர். இவர்கள் அணைவருமே தென்னிலங்கை அரசியல் சக்திகளின் நண்பர்களாகவும் நேசசக்திகளுமாகவுமே உள்ளனர்.

- இவர்களது அரசியல் தமிழ்மக்களுக்கானதல்ல. தமக்கானதும் தென்னிலங்கை அரசியல் சக்திகளின் நலன் கலந்ததுமாகும். தமிழ் மக்களின் வாக்குகளுக்காக தீவிர தமிழ்த் தேசியம் பேசுகின்றவர்கள் திரைமறைவு இணக்க அரசியலுக்குச் சொந்தக்காரர்கள். தமிழ்த் தேசியத்திற்கு எதிராகப் பேசிக் கொண்டு தென்னிலங்கை சக்திகளின் மனங்குளிர நடந்தும் பேசியும் வெளிப்படையான இணக்க அரசியலுக்கு உரித்துடையவர்கள். மொத்தத்தில் இருபகுதியினரும் நடத்தும் இணக்க அரசியலால் தமிழ் மக்கள் தென்னிலங்கை அரசியலில் ஏலம் விடப்படுகின்றனர் விலை பேசப்படுகின்றனர் என்று கூறுவதே பொருந்தும்.

இதற்கும் அப்பால் சர்வதேச சமூகங்களின் கைப் பிள்ளையாகவும் தமிழ்த் தலைமைகள் மாறியுள்ளஎன என்பதும் பரமரகசியமல்ல.

• உரிமைப் பயணத்தை ஒரு அங்குலமேனும் நகர்த்த முடியுமா?

அதுமாத்திரமல்ல வடக்குக் கிழக்கில் தமிழ் கட்சிகள் தாம் கைப்பற்றிக் கொண்ட பிரதேச சபைகள் மாகாண சபைகளில் தமிழ் மக்களின் நலன்களுக்காக அன்றி "தமக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டும்" என்ற தமிழ்ப் பழ மொழிக்கேற்ப நடந்து கொண்டதை தமிழ் மக்கள் மாத்திரமல்ல நாடே அறியும். இந்தத் தமிழ்த் தலைமைகளால் தமிழ் மக்களின் உரிமைப் பயணத்தை ஒரு அங்குலமேனும் நகர்த்த முடியும் என்பது கேள்விக்குறியே.

• புலம்பெயர் அமைப்புக்கள்

- தாயகத்தில் தமிழ்த் தலைமைகளின் செயற்பாடுகள்தான் இப்படியென்றால் தமிழ்மக்கள் பெரிய அளவில் நம்பிக் கொண்டிருக்கின்ற புலம்பெயர் அமைப்பக்களும் தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் தடைக்கற்களாக இருப்பதான செய்திகள் வெளிவருகின்றன. இந்த அமைப்புக்களும் தமக்கான நிகழ்ச்சி நிரல்களை வைத்துக் கொண்டு செயற்படுவதுடன் தாயகத்தில் உள்ள தமிழ் அமைப்புக்களையும் தமது நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப வழிநடத்திக் கொண்டிருக்கின்றன.


• தமிழ் மக்களுடன் கைகோர்த்துப் பயணிக்க எவரும் இல்லை.

இவை அணைத்துமே தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் தமிழ் மக்களுடன் கைகோர்த்துப் பயணிக்க எவரும் இல்லை என்ற நிலையே உள்ளது.

எனவே தமிழ் மக்கள் தாமே பாதை வெட்டிப் பயணிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இந்தப் பயணத்தில் தாயகத்திலும் புலம் பெயர் தேசங்களிலும் புதிய சக்திகள் மேல் எழும்ப வேண்டும். இது தாயகத்திலும் புலம் பெயர் தேசத்திலும் உள்ள தேசியத்தை நேசிக்கின்ற சக்திகளிடம் தமிழ் மக்களின் சார்பில் முன் வைக்கின்றோம்.

Email : vathevaraj@gmail.com

# கடன் வாங்கச் சமாதானம்?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

2023 ஆம் ஆண்டிலாவது உலக நாடுகளிடம் கையேந்தாத நிலைக்கு இலங்கை வளர்ச்சியடைய வேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் அவர்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆனால் நாடு இந்த ஆண்டு மட்டுமல்ல இனி வரும் ஆண்டுகளிலும் பிச்சை எடுக்காமல் தப்பிப்பிழைக்க முடியாது என்பதே மெய்நிலை ஆகும்.

பன்னாட்டு நாணய நிதியம் தரும் சி-றிய உதவி கடனைத் தீர்க்கப் போதாது. அது 2.8பில்லியன்கள் மட்டும் தான்.ஆனால் நாட்டின் மொத்த கடன் தொகை 57 பில்லியன்கள். எனவே கடன் வாங்கி கடனை அடைக்க முடியாது. பன்னாட்டு நாணய நிதியத்திடம் இலங்கை அரசாங்கங்கள் கடன் வாங்குவது இதுதான் முதல் தடவையும் அல்ல. இதற்கு முன் பதினாறு தடவைகள் கடன் வாங்கியி ருக்கின்றன. அதில் ஏழு தடவைகள் பன்னாட்டு நாணய நிதியத்தோடு பொருந்திக் கொண்ட உடன்படிக்கைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமல்படுத்தவில்லை. இந்நிலையில் கடனை வாங்கிக் கடனை அடைக்கலாம் என்பதற்குமப்பால் கடனே இல்லாத ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. கடன் இல்லாத ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவது என்றால் பிச்சை எடுக்காத ஒரு நாட்டை கட்டியெழுப்புவது என்றால் ஒரே ஒரு வழி தான் உண்டு. அது இனப்பிரச்சினை தீர்ப்பதுதான். இனப்பிரச்சினைதான் நாட்டை கடனாளியாக்கியது. கடன் வாங்கி, கடன் வாங்கி யுத்தம் செய்தார்கள். வாங்கிய கடனில் வெடிமருந்து வாங்கி கடனைக் கரியாக்கினார்கள், தமது சொந்த மக்களையே கொன்று குவித்தார்கள். இப்பொழுது மீள முடியாத கடனில் நாடு சிக்கிவிட்டது.

இவ்வாறாக கடன் வாங்கி அல்லது பிச்சை எடுத்து யுத்தம் செய்த ஒரு நாடு இப்பொழுது பிச்சை எடுப்பதற்காக சமாதானம் செய்கிறது என்பதுதான் நூதனமான ஒரு மாற்றம். ஆனால் பிச்சை எடுத்து செய்த யுத்தம் உண்மையானது. பிச்சை எடுப்பதற்காக செய்யும் சமாதானம் உண்மையானதா என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ தந்திரமாகவோ அல்லது விசுவாசமாகவோ பேச்சுவார்த்தைகள் நடக்கப்போகின்றன என்பது மட்டும் தெரிகிறது.கடந்த 75 ஆண்டுகளாக இவ்வாறு பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இப்பேச்ச வார்த்தைகளில் சிங்களத் தலைவர்கள் மாறியிருக்கிறார்கள். தமிழ்த் தலைவர்களும் மாறியி க்கிறார்கள். இதில் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் மாறாமல் இருந்த ஒரே தலைவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்தான். இப்பொழுது கடந்த 13 ஆண்டுகளாக சம்பந்தர் பேசி வருகிறார்.

கடந்த நூற்றாண்டுகால அனுபவத்தின்படி பேசுவதற்கு புதிதாக விடயங்கள் கிடையாது. ஒரே ஒரு விடயத்தில் துணிச்சலான முடிவை எடுத்தால் சரி. நாட்டின் ஒற்றை ஆட்சி கட்டமைப்பை உடைத்து ஒரு கூட்டாட்சி கட்டமைப்பப் உருவாக்கத் தயாராக இருந்தால் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடியும். ஆனால் அந்த அடிப்படை விஷயத்தை விவாதிப்பதற்கு சிங்களக் கட்சிகள் தயாரா என்பதே இங்குள்ள பிரதானமான கேள்வியாகும். அவ்வாறு இதயமான ஒரு பிரச்சினையை விவாதிப்பதற்கு தயாரற்ற சிங்களக் கட்சிகள் காலாகாலமாக வெவ்வேறு தலைப்புகளில் தீர்வுகளை முன்வைத்து வருகின்றன என்பதே கடந்த 75 ஆண்டுகால அனுபவம் ஆகும்.

ஒரு சமஸ்ரித் தீர்வுக்குத் தயாரற்ற சிங்களத் தலைமைகள் தொடக்கத்தில் தாம் ஒப்புக்கொண்ட உடன்படிக்கைகளில் இருந்து பின்வாங்கினார்கள். உடன்படிக்கைகளை கிழித்து எறிந்தார்கள். அதன்பின் இந்திய இலங்கை உடன்படிக்கையின்போது இந்தியாவை தம்வசப்படுத்தி மாகாண சபை என்ற தீர்வை முன்வைத்தார்கள். அது ஒற்றை ஆட்சி கட்டமைப்புத்தான். அதன் பின் திருமதி சந்திரிகாவின் காலத்தில் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டது. ரணில் விக்ரமசிங்க அதை எதிர்த்து நாடாளுமன்றத்தில் அந்த தீர்வின் வரைபை நெருப்பிட்டுக் கொளுத்தினார். ஆனால் அந்த தீர்வும் சமஸ்டி அல்ல.அதுவும் ஒற்றை ஆட்சியை துணிச்சலான விதங்களில் உடைத்துக் கொண்டு வெளியே வரவில்லை. அதன்பின் கடந்த 2015ல் இருந்து 2018 வரையிலும் ரணில் விக்ரமசிங்கவும் கூட்டமைப்பும் இணைந்து ஒரு தீர்வை நோக்கி உழைத்தார்கள். சம்பந்தர் பிரிக்கப்பட முடியாத பிளவுபடாத ஒரு நாட்டுக்குள் அந்த தீர்வு காணப்படும் என்று திரும்பத் திரும்பச் சொன்னார். இப்பொழுதும் கூறுகிறார். அதேசமயம் சிங்கள மக்களுக்கு அரசாங்கம் “எக்கிய ராஜ்ய” என்று கூறியது. அதுவும் சமஸ்டி அல்ல. அதாவது, சிங்கள அரசியல்வாதிகள் சமஸ்டியை ஒரு தீர்வாக முன்வைக்கத் தயாரற்ற காரணத்தால் வெவ்வேறு பெயர்களில் சமஸ்ரியல்லாத தீர்வு முன்மொழிபுகளை முன்வைத்து வருகிறார்கள் என்பதே கடந்த 75 ஆண்டுகால அனுபவம். இப்பொழுது ஆரம்பித்திருக்கும் பேச்சுவார்த்தைகளில் நிலைமையும் அதுதான் என்றால் ஒரு கட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முறியும்.

அதிலும் குறிப்பாக இப்போதிருக்கும் ஜனாதிபதி கட்சி இல்லாத ஒரு தலைவர். அவர் தனது அரசியல் எதிரிகளின் பலத்தில் தங்கியிருக்கிறார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் ராஜபக்சகளின் வேட்பாளராக களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் தெரிகின்றன. எனவே ராஜபக்சக்களை மீறி ஒரு தீர்வைத் அவர் தர மாட்டார்.ராஜபக்சக்கள் 13 பிளஸ்தான் தங்களால் தரக்கூடிய தீர்வு என்று ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். சஜித் பிரேமதாசவும் 13ஐ முழுமையாக அமல்படுத்துவதே தமது தீர்வு என்று கூறுகிறார். இப்படிப் பார்த்தால் 13ஆவது திருத்தத்தை தாண்டக்கூடிய ஒரு நிலைமை தென் இலங்கையில் இல்லை. அவ்வாறு பதின்மூன்றாவது திருத்தத்தை தொடர்ந்து வலியுறுத்துவதன்மூலம் சிங்களத் தலைவர்கள் இந்தியாவையும் தம்பசப்படுத்தலாம்.

கடந்த சில வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை அதிகம் நெருங்கி செல்கிறார். அவர் பதவியேற்ற காலத்தில் இருந்ததைவிடவும் இப்பொழுது அவருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு ஒப்பீட்டளவில் சுமூகமாகி வருகிறது. இந்தியாவை திருப்திப்படுத்தும் விதத்தில் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை நிர்மாணிக்கும் வேலைகளை இந்தியாவின் அதானி குழுமத்திடம் அவர் சில வாரங்களுக்கு முன் ஒப்படைத்தார். பலாலி விமான நிலையத்தை மறுபடியும் திறந்துவிட்டார், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையே ஒரு பயணிகள் போக்குவரத்து சேவையும் விரைவில் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்த சுதந்திர தின விழா கொண்டாட்டங்களில் ஒரு பகுதி யாழ்ப்பாணத்திலும் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்ட யாழ் கலாச்சார மையத்தை ஒரு இந்திய தலைவர் வந்து திறப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலில் இந்தியப் பிரதமர் மோடி வருவார் என்று கூறப்பட்டது. பின்னர் இந்திய ஜனாதிபதி வருவார் என்று கூறப்பட்டது. இப்பொழுது வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யார் வந்தாலும் அது ஒரு கோல-ாகலமான விழாவாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அவ்வாறு இந்திய கலாச்சார மையத்தை திறக்கும் விழாவை இலங்கையின் சுதந்திர தின விழாவின் ஒரு பகுதியாக ஒழுங்கமைப்பதன் மூலம் அரசாங்கம் இந்தியாவையும் சமாளிக்கலாம் சிங்களக் கட்சிகளையும் சமாளிக்கலாம். எனவே கடந்த சில வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை நோக்கி முன்னெடுக்கும் நகர்வுகளைத் தொகுத்துப்பார்த்தால் அவர் பேச்சுவார்த்தைகளிலும் இந்தியாவின் ஒத்துழைப்பை மறைமுகமாக பெற முயற்சிக்கலாம் என்று தெரிகிறது.

13-வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த போகிறோம் என்று அரசாங்கம் கூறுமாக இருந்தால் அது இந்தியாவுக்கும் விருப்பமாகத்தான் இருக்கும். எனவே நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைகள் 13-வது திருத்தத்தை தாண்டுமா என்பது ஒரு முக்கியமான கேள்வி. அப்படித் தாண்டினாலும் தாண்டாவிட்டாலும் நிச்சயமாக ஒற்றையாட்சியை உடைத்துக் கொண்டு வெளியே வராது என்பது மட்டும் தெரிகிறது.

அதாவது வெளிப்படையாக ஒரு சமஸ்டி தீர்வை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிலைமை தென்னிலங்கையில் இப்பொழுதும் இல்லை. ஆயின் தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? பேச்சுவார்த்தைகளில் பெயரால் குறைந்தபட்சம் பின்வரும் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். முதலாவதாக, அரசியல் கைதிகளை விடுவிக்கலாம். இரண்டாவதாக காணிகளை ஆகக் கூடிய மட்டும் விடுவிக்கலாம். மூன்றாவதாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்களுக்கு ஒப்பீட்டளவில் அதிக நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கலாம். இப்படிப்பட்ட சிறிய உடனடித் தீர்வுகளைத்தான் பெறலாம். நிரந்தரத் தீர்வை பெறுவதென்றால் சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் உண்மையான பௌத்தர்களாக மாற வேண்டும்.



## உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## கனடா பெருமையுடன் வழங்கும்
## உரும்பிராய் பாடசாலைகளின்

UHCOSA
Est 1994

# 27 வது பொங்கல் விழா

## PONGAL VIZHA




**தொடரும் பொங்கல் விழாவில்**
**அதி சிறந்த இயல், இசை, நாடக**
**நிகழ்வுகளை கண்டுகளிக்க**
**அரியதோர் வாய்ப்பு.**

ஜனவரி மாதம் 21 ஆம் திகதி
சனிக்கிழமை மாலை 5 : 30 மணி



## THAMIL ISAI KALAA MANRAM
**1120 TAPSCOTT RD, SCARBOROUGH M1X 1E8**

நிகழ்ச்சி தொடர்பான மேலதிக விரங்களுக்கு :

கதிரமலைநாதன் : 647 287 4738
சுமி : 647 710 7816
வரதன்: 416 805 7392

urumpiraischoolsosa.ca@gmail.com

விளம்பர அனுசரணையாளர். சாந்தா பஞ்சலிங்கம்



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# சிறைக் கைதிகள் அடிமை விலங்குகளா?

## (கனடா உதயனின் சிறப்புக் கட்டுரை)

- யாழிலிருந்த நடராசா லோகதயாளன்



ஒரு புகைப்படம் ஆயிரம் வார்த்தைகளிற்குச் சமம் என்று பொதுவாக சொல்லப்படுவதுண்டு. அவ்வகையில் சில படங்கள் சரித்திரத்தையே மாற்றியமைத்தன. பல புகைப்படங்கள் காலங்களின் ஆவணங்களாயின. இன்றைய சமூக ஊடக காலத்தில் ஒரு புகைப்படமோ அல்லது காணொளியோ வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்துகிறது.

இதில் சில புகைப்படங்கள் மிகவும் சாதாரணமாக இருக்கலாம், ஆனால் அவை உடனடியாக தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை. ஊடகத்துறையில் மிக உயர்ந்த பரிசுகளில் ஒன்றான புலிட்சர் பரிசை சில புகைப்படங்கள் பெற்று அதையும் அதை எடுத்த புகைப்படக்காரரையும் எக்காலத்திற்கும் புகழில் உச்சிக்கு எடுத்துச் சென்றன.

அப்படி இலங்கையில் எடுக்கப்பட்ட ஒரு புகைப்படம் சமூக ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த புகைப்படம் உடனடியாக ஏற்படுத்திய தாக்கம் நாட்டின் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையகம் வரை சென்றுள்ளது.

யாழில் சிறைக் கைதிகளை சங்கிலியில் பிணைத்து கொண்டு செல்லும் விடயம் உள்ளூர் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தால் அதன் தலைமைப் பணிமனையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி தமது கடற்பரப்பில் பிரவேசித்ததான குற்றச்சாட்டில் இலங்கை கடற்படை அவர்களைக் கைது செய்தது. பின்னர் வழக்கமான நடைமுறைகளின்படி கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவ்வகையில் அவர்கள் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட விதம் இப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அவர்கள் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட சம்பவம் - தொடர்ச்சியாக சில நூற்றாண்டுகளிற்கு முன்னர் ஆப்ரிக்காவிலிருந்து அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளிற்குக் கொண்டு செல்லப்படுவதற்காக கறுப்பின மக்கள் சந்தையில் விற்கப்பட்ட காட்சிகளை நினைவூட்டுகிறது என்று உள்ளூர் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார். அவ்வகையில் ஆப்ரிக்க மேற்கு கரையோர நாடுகளில் வெள்ளைக்கார முதலாளிகளால் விலைக்கு வாங்கப்பட்டு கரும்பு மற்றும் புகையிலை தோட்டங்களில் அடிமைகளாக வேலை செய்வதற்கு இவர்கள் கப்பலேற்றப்பட்ட பிறகு அவர்களுக்கும் தாய் மண்ணிற்குமான தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டது.

அந்த கறுப்பின மக்களின் கை, கால்கள், கழுத்து ஆகிய இடங்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு மிகவும் மோசமான சூழலில் ஒருவரோடு ஒருவர் இடுப்பில் மற்றொரு சங்கிலியால் பிணைக்கப்பட்டனர். அப்படி எடுக்கப்பட்ட புகைப்படங்கள் உலகளவில் பிரசித்தி பெற்று அடிமை வியாபாரம் ஒழிக்கப்படுவதற்கு அடித்தளமிட்டது என்பது உலக வரலாறு.

இப்போது யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களும் அவ்வகையிலேயே அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் கைகளில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நீதிமன்ற வளாகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது ஆப்ரிக்க அடிமை வியாபார காலங்களை நினைவூட்டியது என்றும் அந்த உள்ளூர் செயற்பாட்டாளர் ஆழ்ந்த கவலை



வெளியிட்டார்.

"இது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் களங்கத்தை ஏற்படுத்தும் அவமானகரமான ஒரு செயல், ஜனநாயக விழுமியங்களைப் பேணுவதாக கூறும் ஒரு நாட்டில், அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்கு இதுவொரு எடுத்துக்காட்டாக உள்ளது".

யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொள்ளும் இப்படியான செயல்பாடு ஒட்டுமொத்த நாட்டின் ஜனநாயகத்தையும் மனித நேயத்தையும் பிற நாடுகளில் அம்பலப்படுத்தி, மேலும் அவப்பெயர் ஏற்படுத்திக் கொள்ளும் அளவிற்கு மோசமாகவுள்ளது என்று அந்தப் படங்களைப் பார்த்தவர்கள் சமூக ஊடகங்கள் வாயிலாக கண்டனமும் விசனமும் வெளியிட்டுள்ளனர்.

நீதிமன்றங்களினால் விளக்கமறியலில் வைக்கப்படும் விளக்கமறியல் கைதிகளை வழக்குத் தவணைகளிற்கு நீதிமன்றத்திற்கு அழைத்து வரும் பொறுப்பு சிறைச்சாலைகளிற்கே உரியது. இவ்வாறு அழைத்து வரும் விடயம் தொடர்பில் கடந்த ஆண்டு ஆரம்பத்திலும் ஓர் விமர்சனம் எழுந்தபோதும் எவரும் கண்டுகொள்ளவில்லை இந்த ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்ற வாசலில் கைதிகள் வரிசையாக ஒருவரோடு ஒருவர் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அடிமைகளைப் போல் கொண்டுவரப்படும் அவலம் மீண்டும் அரங்கேறியது.

அதாவது கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி பருத்தித்துறை கடலில் கைது செய்யப்பட்ட இந்தியாவின் காரைக்கால் பகுதியை சேர்ந்த 12 மீனவர்களும் இந்தாண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இதற்கமைய 2ஆம் திகதி நீதிமன்ற நடவடிக்கைகளிற்காக அவர்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களினால் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றி வரப்பட்டு நீதிமன்ற வாசலில் இறக்கப்பட்டு கால் நடையாக அழைத்துச் செல்லப்பட்டனர்.



அப்படி அழைத்துச் செல்லப்பட்டவர்களை கை விலங்கு போடப்பட்டு அழைத்துச் செல்லாது ஒரே சங்கிலியில் இணைந்து பூட்டப்பட்டு கொண்டு செல்லப்பட்டது இந்திய ஊடகங்களில் மிகக் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றது. அந்தப் படங்கள் இந்திய ஊடங்கள் மட்டுமின்றி மேலும் பல சமூக ஊடகத் தளங்களிலும் வெளியாயின.

"எமது நாட்டு மீனவர்களை மனிதாபிமானமற்ற வகையில், மிகவும் மோசமாக மனித உரிமைகளை மீறும் வகையில் அடிமைகளைப் போன்று இலங்கை அதிகாரிகள் நடத்தியது கண்டிக்கத்தக்கது, எமது கண்டனத்தை நாங்கள் உரிய வகையில் இந்திய அரசின் மூலம் இலங்கை அரசிற்கு தெரிவிப்போம். இலங்கை மீனவர்களோ அல்லது வேறு வகையில் சட்ட விரோதமாக இந்தியப்பரப்பிற்கு உள்ளே நுழைபவர்களை ஒரு போது இந்தியா அவ்வாறு நடத்தியது இல்லை" என்று புதுச்சேரி அரசின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு விமர்சனத்தை முன்வைக்கும் அளவிற்கு யாழ்ப்பாணம் சிறைச்சாலை நிர்வாகம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து விட்டது. இவ்வாறு ஒரே சங்கிலியில் பிணைக்கப்பட்ட அனைவரும் ஒரே திசையில் கரங்களால் பிணைக்கப்படவில்லை. மாறாக வலது கரம் இடது கரம் என ஒழுங்கற்ற முறையில் நடப்பதற்கே பெரும் சிரமத்தை ஏற்படுத்தும் வகையில் சிறைச்சாலை அதிகாரிகளால் விரும்பிய கரங்களில் இணைக்கப்பட்டுள்ளதனால் அந்த விளக்கமறியல் கைதிகள் பெரும் சிக்கலை எதிர்கொள்கின்றனர். இத்தனைக்கும் அப்பால் ஒரு சங்கிலியில் பிணைக்கப்பட்டு வாகனத்தில் அழைத்துச் செல்லும்போது வீதியில் ஓர் அனர்த்தம் ஏற்படுமாக இருந்தால் எஞ்சிய கைதிகள் எவ்வாறு உயிர் தப்ப முடியும் என்ற ஐயமும் எழுகின்றது. எனவே இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு, மனித உரிமை செயல்பாட்டாளர்கள் ஏன் உரிய அளவில் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற வினாவும் உள்ளது.

நீதிமன்ற வாசலிலேயே அவர்கள் மனிதாபிமானமற்ற வகையில் சங்கிலியால் இணைக்கப்பட்ட அவர்களது கைகள் அவிழ்க்கப்படுவதனால் இவர்களை எவ்வாறு கொண்டு வரப்படுகின்றனர் என்பதனை நீதிபதிகளும் கண்டிருப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்று மூத்த சட்டத்தரணி ஒருவர் சுட்டிக்காட்டுகிறார்.

இதனால் இவை குற்றப்பத்திரமாக இன்றி மனிதநேய விண்ணப்பமாக எந்த நாட்டுக் கைதியையும் மனிதர்கள் என மதித்து ஒரே சங்கிலியில் இழுத்துச் செல்லப்படுவது உடன் நிறுத்த ஏதும் நடவடிக்கை உண்டா என யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளரை தொடர்பு கொண்டு கேட்டேன்.



"எந்த மனிதருக்கும், எந்தக் கைதிக்கும் அடிப்படை மனித உரிமை உண்டு இதனால் இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு மட்டுமல்ல சிறைச்சாலை ஆணையாளருக்கு விசேட தெளிவூட்டல் வழங்கப்படவும் எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறாமல் இருப்பதனை உறுதி செய்யக் கோருவதற்காகவும் எமது தலைமைப் பணிமனைக்கு உடனடியாக கொண்டு சென்றுள்ளோம்" என்று பொறுப்பாகவும் கவலையுடன் கூடிய பதிலையும் அளித்தார்.

சில அதிகாரிகள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களால் நாட்டின் சட்டங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களிற்கு முரணபாடாக நடந்துகொள்வது நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதோடு மட்டுமன்றி பாரிய மனித உரிமை மீறலாகவும் கருதப்படும் என்றார்.

"ஏனெனில் இவ்வாறான செயலால் நாட்டின் சுய மரியாதையை இழக்க முடியாது என்பதோடு எதிர்காலத்தில் அனர்த்தம் ஏதும் இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டியதும் கட்டாயமாகும் என வலியுறுத்தப்படும் என எதிர்பார்க்கின்றேன்" என்றார்.

உலகளவில் மனித உரிமைகள் மீறல் விடயத்தில் இலங்கைக்கு மோசமான அவப்பெயரே உள்ளது என்பது யாவரும் அறிந்ததே. போர் முடிந்து 13 ஆண்டுகள் நிறைவடைந்தாலும், போர்க்காலத்தில் இடம்பெற்ற மோசமான வன்செயல்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை தொடர்பில் அரசு இதுவரை காத்திரமாக பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்கவில்லை. இறுதிக்கட்டப் போர் முடிந்த பிறகு படையினரிடம் சரணடைந்த, கையளிக்கப்பட்ட அல்லது வலிந்து கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களின் நிலை என்ன என்பது இன்றுவரை பதிலளிக்கப்படாத ஒன்றாகவே உள்ளது.



அப்படியான சூழலில் கைதிகளை அடிமைகளைப் போன்று சங்கிலியால் பிணைத்து நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வது இலங்கைக்கு மேலும் களங்கத்தை ஏற்படுத்துமே தவிர, பன்னாட்டளவில் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெற்றுத்தராது என்பதே யதார்த்தம்.

கடந்த ஆண்டு இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த போது உடனடியாக நாடு ஓரளவிற்கேனும் அதிலிருந்து விடுபட உடனடியாக இந்தியாவே உதவியது என்பதை யாரும் மறுக்க இயலாது. அப்படியான நிலையில், சட்ட விரோதமாக அறிந்தோ அல்லது அறியாமலோ இலங்கை கடற்பரப்பில் நுழையும் இந்திய மீனவர்களை இலங்கை சிறைச்சாலை அதிகாரிகள் இவ்வாறு நடத்துவது இந்திய அரசை துணுக்குறச் செய்யும்.

Toronto District School Board

# நடுத்தர பிரஞ்சு பாடத் திட்டம்

## (4ம் வகுப்பு நுழைவு)

விண்ணப்பங்கள் தொடங்கும் திகதி: ஜனவரி 9, 2023
விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி: பிப்ரவரி 3, 2023

தற்போது பிரெஞ்சு பாடத் திட்டத்தில் இல்லாத தரம் 3 மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்

மேலும் தகவல்களுக்கும் மற்றும் இணையத்தளம் மூலமாக விண்ணப்பிக்க, தயவுசெய்து www.tdsb.on.ca/french இணைப்பை பார்வையிடவும்

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர்க்கும் என் இனிய

# புத்தாண்டு வாழ்த்துக்கள்

Happy New Year 2023



**Constituency Office**
Unit B, 4559 Sheppard Ave. E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040 | raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca

Ontario

# Raymond Cho

MPP - Scarborough North


TITLE SPONSOR
MAHESAN SUBRAMANIAM
REAL ESTATE BROKER
eXp REALTY BROKERAGE
POWERED BY
ASIYANS
Quality Forever
Anaalai Express
Chinese Cultural Centre 5183 Sheppard Ave E,
Scarborough, ON M1B 5Z5
SATURDAY
JAN 07 2023 @ 4.PM
GOLD SPONSOR
ARI PARAMALINGAM
Mortgage Agent
MORTGAGE ALLIANCE
BRONZE SPONSOR
CAN LANKA IMMIGRATION SERVICE INC.
HIMALAYA BANQUET SERVICE
VASANTHA JEWELLERY
VIBRANT HOSPITALITY GROUP
Y&A
Mr. Digital Photo Lab
TORBRAM FIRE PROTECTION
SILVER SPONSOR
YARL CAKE HOUSE INC
RADIO SPONSOR
STREAMING PARTNER
PRINT MEDIA PARTNER
OTHER SUPPORTING SPONSOR
Tamil Mirror
Easy 24 News

Majestic City

Jayasaji JEWELLERY 416 299 5479 416 293 5935

OATC OCEAN ACCOUNTING TAX CONSULTANTS

Dynamic Health and Sports Injury Clinic 416-439-1900

HSB SARAVANAA BHAVAN WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN 3 locations in Canada

# CENTRE FOR YOUTH EMPOWERMENT & COMMUNITY SERVICES - TORONTO

Presents

For tickets, visit: www.universe.com

universe a ticketmaster company



# நீயா நானா புகழ் கோபிநாத்துடன்

# ஒரு மாலைப்பொழுது

## Chinese Cultural Centre

## 5183 Sheppard Avenue East.

## Saturday January 14th, 2023 at 6:30 PM

- அனைவரையும் மகிழ்விக்கும் கனடிய இளம் வாத்தியக் கலைஞர்களின் இனிய இசையோடு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.
- பின்னர் நீயா? நானா? புகழ் கோபிநாத் அவர்களுக்கான உயரிய கௌரவம் வழங்கப்பெற்று தொடர்ந்து அவர் ஒரு மணி நேர பயனுள்ள உரையாற்றுவார்.
- இறுதியில் மேடையில் அவருடன் புகைப்படம் எடுப்பதற்குரிய சந்தர்ப்பம் அனைவருக்கும் வழங்கப்படும்.

For information, visit http://www.cyecstoronto.ca or Call 647 762 9512 or 647-891-7725 E-mail: admin@cyecstoronto.ca

NEW SPICELAND SUPER MARKET

tasty தமிழா

Raj Nadarajah RE/MAX Excel Realty Ltd., Brokerage Direct: 416-333-6115 Tel: 905-475-4750 Fax: 905-475-4770

RE/MAX ACE 416-270-1111

CHAMPIONS OFF TRACK BETTING 416-457-4300

MAHAANS Pick & Press Oil Mill Inc.

ASSORTED SOUTH INDIAN SNACKS & SWEETS 514-833-8332

# குடும்ப விளக்கின் நான்காம் ஆண்டு நினைவுநாள்



அன்னை மடியில்: 15 - 09 - 1961

ஆண்டவன் அடியில்: 11 - 01 - 2019

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று**

ஒருவன் செய்த நன்றியை ஒருபோதும் மறக்கவேகூடாது.
ஆனால் அவன் செய்த தீமையை அந்த
நொடியிலே மறந்து விடவேண்டும்



பனி பொழியும் தேசமதில் பாங்குடனே வாழ்ந்த
திருமகனாம் குமார் என்னும் அழகனே
கடல் கடந்து நீ சென்று நாம் வாழ
வழிவகுத்தாய்
இன்றும், என்றும் உன் நினைவு அழியாது
மனங்களில் நிறைந்தாய் மாசற்ற மனிதராய்
உணர்ந்தோம்
மனதை ஈர்ந்தவராய் பாராட்டு பெற்று பதவி
உயர்வுகள் தேடி வந்தன
சினம் கொள்ளல் உன்னிடத்தில் சிறிதளவும்
இல்லை
சீரான உடைகள், சிங்கார நடை, சிரித்தமுகத்தோடு நட்பு
வட்டங்கள், உறவுகள் நடுவே குதூகலம் நிறைந்து
கொண்டாடி மகிழ்ந்த நாட்கள் இனிவருமா.........
வாழ்க்கை என்பது ஒரு ரயில் பயணம் போலதான்
நிறைய நிறுத்தங்கள், வழித்தடம்மாற்றங்கள்
அனைத்தையும் ரசித்துக்கொண்டே பயணிக்க
கற்றுக்கொள்வோம். வாழ்விலும்கூட.. ...
வேதனை, சோதனை, சாதனை அனைத்தும் கடந்து
காலத்தைக் கழித்து வாழும் நாங்கள் என்றும் உன்
நினைவுடன், எங்களை வாழவைக்கின்றாய் என்ற
மகிழ்வுடன் உன் ஆத்மா சாந்திபெற மலர்தூவி
வணங்குகின்றோம்.

திதி: 28-12-2022







## திரு. சத்தியசீலன் சத்தியகுமார் (குமார்)

(யாழ். சுருவில் ஐயனார் கோவிலடி, கனடா)

**28-12-2022 திதி அன்று அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப்பிரார்த்தனை
சிறப்பாக நடைபெற்றது.**

## என்றும் உன் நினைவுடன் வாழும்
## குடும்பஉறவுகள்

# பட்ஜெட் தோல்வியை அடுத்து யாழ் மாநகர மேயர் பதவி விலகினார்

- எமது யாழ் செய்தியாளர்




யாழ் மாநகர சபையில் ஆதரவை இழந்ததையடுத்து மாநகர முதல்வர் பதவி விலகும் நிலைக்கு ஆளாகி அதிலிருந்து விலகியுள்ளார். அவர் சமர்ப்பித்த வரவு செலவு திட்டம் முதல் முறை சபையில் தோல்வியடைந்தது. இரண்டாவது முறையும் அதற்கு ஆதரவு கிடைக்காது என்ற சூழல் ஏற்பட்ட நிலையில் அவர் பதவி விலக நேரிட்டது.

வட மாகாணத்தில் மிகவும் முக்கிய உள்ளூராட்சி அமைப்பான யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தனது மாநகர முதல்வர் பதவியில் இருந்து விலகும் அறிவித்தலை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற மாநகர சபை தேர்தலில் அவர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினராக அவர் மாநகர சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 2020 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலிற்கு பிறகு கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் ஏற்பட்ட மோதல் காரணமாக அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

அவர் மாநகர சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதே சர்ச்சையை ஏற்படுத்தியது. மாநகர எல்லைக்குள் வசிக்காத எவரும் உள்ளூராட்சி சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது உள்ளூராட்சி தேர்தல் விதியை மீறும் செயலாகும் என்று மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் வாழும் ஒருவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுமந்திரன் ஊடாக வழக்கு தொடர்ந்ததையடுத்து அவர் சபை நடவடிக்கைகளில் பங்கேற்க மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. எனினும் அவர் மீதான வழக்கை வழக்குத் தொடுநர் மீளப்பெற்றதை அடுத்து அவர் மீண்டும் சபை அமர்வுகளில் பங்குபெறும் வாய்ப்பு கிட்டியது.

இதேவேளை யாழ்ப்பாணம் மாநகர சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முன்னாள் முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட்டினால் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 மற்றும் 27 ஆம் திகதிகளில் சமர்ப்பித்து தோற்கடிக்கப்பட்டதன் மூலம் ஏற்பட்ட மாநகர முதல்வர் வெற்றிடத்திற்கு 2020-12-30 அன்று முதல்வராக வி. மணிவண்ணன் தேர்வு செய்யப்பட்டார். அவரது தேர்விற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 10 உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர்கள் ஆகியோருடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு உறுப்பினரும் ஆதரவளித்தனர்.

இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் 2021, 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டங்களை நிறைவேற்றி சபையை நடாத்தியபோதும் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

இதன் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை 2022-12-21 அன்று முதல் தடவை சபையில் தாக்கல் செய்த நிலையில் ஆதரவாக 11 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். எதிராக 18 வாக்குகள் அளிக்கப்பட்டது. இதனடிப்படையில் இரண்டாவது தடவை வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பித்தாலும் வரவு செலவுத் திட்டம் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் காணப்படாத நிலையில் முதல்வர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.



# வரி அதிகரிப்பால் வடக்கில் வைத்திய சிகிச்சைக்கு இடையூறு



அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையினால் யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுகளில் வாழும் மக்கள் அடிப்படை வைத்திய வசதிகளையும் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வைத்திய சங்கம் ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் புதிய வருமான வரியானது, வைத்தியர்களுக்கும் பல்வேறு தொழில்துறைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக யாழ். தீவகப் பகுதி வைத்தியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்ப்பாணத் தீவுகளில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கு பணிக்குச் செல்லும் வைத்தியர்கள் போக்குவரத்திற்கு பெருமளவு பணத்தை செலவிடவேண்டியுள்ளதால், அந்த வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்கு வைத்தியர்கள் மிகவும் தயக்கம் காட்டுவதாக யாழ். தீவகப் பகுதி வைத்தியசாலைகளின் வைத்தியர் சங்கத்தின் செயலாளர் எஸ். நிஷாந்தன் கூறியுள்ளார்.

டிசம்பர் 9, 2022 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்நாட்டு வருமான வரி (திருத்த) சட்டத்திற்கு அமைய, மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டும் தனிநபர்களின் வருமானத்திற்கு வரி விதிக்கப்படுவதோடு, ஒரு இலட்ச ரூபாய் வரை மாத வருமானம் பெறுபவர்களுக்கு வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்கனவே பல வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருவதாக சுட்டிக்காட்டிய வைத்தியர் எஸ். நிஷாந்தன், யாழ்ப்பாணத் தீவுகளில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு கடுமையான பற்றாக்குறைக்கு நிலவுவதாகவும், அந்தத் தீவுகளுக்குச் செல்வதற்கு வைத்தியர்கள் அதிக போக்குவரத்துச் செலவுகளைச் சுமக்க வேண்டியிருப்பதே இதற்கு காரணம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புங்குடுதீவு, வேலணை, ஊர்காவத்துறை, காரைநகர், எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளும் வைத்தியர் பற்றாக்குறையை எதிர்நோக்குவதாகவும் இதனால் அந்த வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் வைத்தியர் நிஷாந்தன் சுட்டிக்காட்டினார்.

காரைநகர் வைத்தியசாலையில் இருந்து வைத்தியர் ஒருவர் விலகியுள்ளதாகவும், அனலைத்தீவு வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட வைத்தியர் ஒருவர் அங்கு பணிக்கு சமூகமளிக்காமலேயே விலகியுள்ளதாகவும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் வெளிப்படுத்தினார்.

வேலணை வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மாத்திரமே கடமையாற்றுவதுடன் அவரும் வெளியேறத் தயாராகி வருவதால் வைத்தியசாலை மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதோடு, நெடுந்தீவு வைத்தியசாலையிலும் ஒரு வைத்தியரே கடமையாற்றுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீவுகளில் பயணச் செலவுகளுக்கு மேலதிகமாக, உணவுப் பொருட்களின் விலையும் மிக அதிகமாக உள்ளதாக ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த வைத்திய சங்கத்தின் செயலாளர், தீவுகளில் உள்ள வைத்தியர்களுக்கு உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கிடைப்பதில்லை எனவும் கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் விரைவான தீர்வை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்தியர் நிஷாந்தன் கோரியுள்ளார்.

யாழ். தீவக மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள ஈ பி டி பி கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தற்போதைய அரசாங்கத்தின் மீன்பிடி அமைச்சராக உள்ளார்.



தனியார் சேவைகளை வழங்கும் வைத்தியர்கள் உட்பட தனியார் சேவை வழங்குனர்களும் புதிய வரி திருத்தத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதாக, நுகர்வோர் சேவைகள் பிரதி ஆணையாளர் எஸ். எஸ். டி. வீரசேகர கூறியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனிடையே வருட ஆரம்பத்திலேயே வங்கி வட்டியை உயர்த்துவதற்கு ஆசிரியர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பெற்ற கடனுக்கான வட்டி அதிகரிப்பை உடனடியாக நிறுத்துமாறு நாட்டின் முன்னணி ஆசிரியர் சங்கம் ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனவரி 2ஆம் திகதி திங்கட்கிழமை ஆசிரியர் குழுவுடன் மக்கள் வங்கியின் பொது முகாமையாளரைச் சந்தித்த இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், குறித்த கோரிக்கையை எழுத்து மூலம் முகாமையாளரிடம் கையளித்துள்ளார்.

மக்கள் வங்கியானது பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு "குரு செத" கடன்களை வழங்குகிறது. கல்வித்துறையைச் சேர்ந்த ஆசிரியர்கள் மக்கள் வங்கியில் குறித்த கடனை பெருமளவில் பெற்றுள்ளதோடு, அது தொடர்பான கடன் தவணை மற்றும் வட்டியை செலுத்தி வருவதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

"இந்த "குரு செத" கடன் கடந்த காலங்களில் 9.5மூ வட்டியில் வழங்கப்பட்டது. அந்த வீதத்திற்கு அமைய கடன செலுத்தப்பட்டு வருகின்ற நிலையில், வட்டி வீதம் 9.5 வீதத்திலிருந்து 15.5 வீதமாக உயர்த்தப்படுமென்ற அறிவித்தல் கடிதம், வங்கி கிளைகளுக்கு ஊடாக கடன் பெற்ற ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது".

இது ஒரு பாரிய அடக்குமுறை மற்றும் நியாயமற்ற செயற்பாடு என இலங்கை ஆசிரியர் சங்கம் வங்கி நிர்வாகத்திடம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக கடன் வழங்கும்போது 40% கடன் வரம்பை கருத்தில் கொண்டு, அந்த வரம்புக்கு உட்பட்டு 9.5% வட்டியில் வழங்கப்படும் கடனுக்கான வட்டி வீதத்தை 15.5ஆக உயர்த்துவதால், மேற்கூறிய 40% வரம்பு மீறப்படுவதாக தொழிற்சங்கம் தெரிவிக்கின்றது.

ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கருத்துக்கு அமைய, மக்கள் வங்கியின் 2021 ஆண்டு அறிக்கைக்கு அமைய, 14.5 மில்லியன் வாடிக்கையாளர்களில் 1.9%, அதாவது 275,500 கல்வித் துறையில் உள்ள பணியாளர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கல்வித்துறைக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி வீதத்தை அதிகரிப்பதன் மூலம், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் கடன் பெற்ற அனைவரும் மேலும் பாதிக்கப்படுவதாக ஆசிரியர் சங்க தலைவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுத் தொடர்பில் கவனம் செலுத்தி கல்வித்துறைக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி வீதத்தை உயர்த்தும் தீர்மானத்தை நிறுத்துமாறும், குறிப்பாக குரு செதவின் கீழ் கடன் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான வட்டியை 9.5 வீதத்திலிருந்து 15.5 வீதமாக உயர்த்தும் தீர்மானத்தை நிறுத்தி, கடனைப் பெறும் போது ஒப்புக்கொள்ளப்பட்ட அதே 9.5 என்ற வட்டி வீதத்தையே அறவிட ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த கோரிக்கைக்கு பதிலளித்த வங்கி அதிகாரிகள், இது தொடர்பாக வியாழக்கிழமைக்குள் பதில் அளிப்பதாக தெரிவித்துள்ளனர்.



# 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
03
-
08
-
1954



விண்ணில்
01
-
12
-
2022

# திருமதி- திலகவதி செல்வராஜா

## (திருநெல்வேலி)

யாழ்ப்பாணம். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி. திலகவதி செல்வராஜா அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
மங்களமாய் மங்கையர் திலகமாய் வாழ்ந்தவளே, எங்கு சென்றாய்?
குடும்பம் எனும் கோயிலைக் கட்டிக் காத்த தெய்வமே
திடீரென நீ மறைந்த மாயம்தான் என்ன
கண்ணுக்கு இனிய துணைவரையும் கண்ணிறைந்த
செல்வப் புதல்விகள் ஐவரையும். குடும்பத்தின் சொத்தாகப் பெற்றெடுத்த
முத்துக்கு முத்தான செல்வப்புதல்வனையும்
கொஞ்சும் மழலைகள் பேசும் பிஞ்சுப்பேரக் குழந்தைகளையும்
கங்கும். பகலும் கண்ணுறங்காது. நெஞ்மதில் நிறுத்திப் பூரித்து மகிழ்ந்த
தெய்வமே எங்கே சென்றாய்
கனடா வந்து களிப்புடன் செல்வமகனுடனும். செல்வங்களோடும் வாழ
எண்ணியிருந்தவேளை காலன் செய்த கோலம்தான் என்ன?
இல்லமது நாடி வந்தோரை. இன்முகமாய் நின்று இதமாய் விருந்தோம்பி
அவர்களின் இதயமதில் நிறைந்தவளே எங்கு சென்றாய
உற்றார் என்றால் உருகி நிற்பாய். உற்றார்,சுற்றத்தார் உறவைப்பேணி.
அற்றார்க்கு உதவும் அம்மையே எங்கு சென்றாய்
தேடுகின்றோம்.. காணவில்லையே!
உன் கண்ணில் கருணை. பேச்சினிலே இனிமை. சினம் இன்றி மனம்
திறந்து இத் தரணிதனில் வாழ்ந்த உத்தமி நீ
கண்மூடி முழிப்பதற்குள் பேச்சிழந்து மறைந்த மாயம்தான் என்ன?
நான் வளர்த்தவளே. காலமெல்லாம் என்னை வாழ்த்தியவளே!

நான் ஊர் வந்தபோது உன்னோடு நிறையப்பேசவில்லை.
நெஞ்சம் குமுறுகின்றேன் நீ எப்படிப் போனாய்
இன்றும் துடிக்கின்றேன் அம்மா!
ஆறாது. ஆறாது அழுதாலும் ஆறாது...
எவர்தாம் எம்மைத் தேற்றுவார்?
பொல்லாத காலன் சொல்லாமல். கொள்ளாமல் அவசரமாய்
உன்னை அழைத்ததேனோ
அம்மா! எங்கள் திலகமே நீ வாழ்ந்த திருவாழ்வும்
நீ செய்த புண்ணியமும். என்றென்றும் நிலைத்திருக்கும்

எங்கள் அருமைத் தாயே உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, எங்கள் பாசமுள்ள தாயாரின் மறைவுச் செய்தியறிந்து எம்மைத் தொடர்பு கொண்டு, நேரில் வந்தும் அஞ்சலிசெய்தும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்

**உன் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்**
**சுரேஷ்குமார், தீபா, இந்துகா (கனடா), விஜிதா (லண்டன்), சிந்துஜா (இலங்கை), பகீரதி (பிரான்ஸ்)**
**பொற்கொடி கந்தசாமி (சிறியதாய், கனடா) 289-660-3705**



# Dr. புஷ்பா வன்னித்தம்பி
## பல் வைத்தியர்

## Dr. Pushpa.V & Associates
Dentist

**New Patients Welcome**

Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday by Appointment only



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)

**416-289-7187**

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)

**905-201-8900**





# கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
## NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
**Reduce your debts upto 80%**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# பேச்சு வார்த்தை காயா பழமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

**- கனடா நக்கீரன்**

சனாதிபதி விக்கிரமசிங்க அவர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு க்கும் இடையிலான சந்திப்பு சனவரி 05, 2023 ஆம் நாள் கொழும்பில் நடந்து முடிந்துள்ளது. இனச் சிக்கல் உட்பட தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பல நெருக்கடிகள் தொடர்பாக சனாதிபதி விக்கிரமசிங்க அவர்களோடு நடத்தப்படும் மூன்றாவது சந்திப்பு இதுவாகும்.

இந்தச் சந்திப்பில் ததேகூ இன் சார்பில் இரா. சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். அரச தரப்பில் சனாதிபதி விக்கிரமசிங்க அவர்களோடு பிரதமர் தினேஸ் குணவர்தன, அமைச்சர்களான விஜயதாச இராஜபக்ச மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொண்டுள்ளர்.

இனச் சிக்கலுக்கான தீர்வுத் திட்டம் பற்றி எதிர்வரும் சனவரி 10,11,12, 13 இல் அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இறுதிக் கலந்துரையாடல் இடம்பெற இருக்கிறது. அந்தக் கலந்துரையாடலுக்கான நிகழ்ச்சி நிரலே நேற்று நடந்த சந்திப்பில் முடிவு எட்டப்பட்டன. இந்தச் சந்திப்புகளில் தமிழ்மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் முக்கிய சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும், அதன் பின்னரே இனச் சிக்கலுக்கான அரசியல் தீர்வு பற்றிப் பேசி முடிவெடுக்கப்படும்.

எது எப்படியிருப்பினும் இந்த ஆண்டு பெப்ரவரி 4 இல் நடைபெறும் இலங்கையின் 75 ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்தின் முன்னர் இனச் சிக்கலுக்குத் தீர்வு காணப்படும் என்று சனாதிபதி விக்கிரமசிங்க அவர்களே கெடு வைத்துள்ளார். இலங்கையின் சுதந்திர தினத்துக்கு இன்னும் எண்ணி 30 நாட்களே எஞ்சியிருக்கிறது. அதற்கிடையில் இனச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியுமா அல்லது இயலுமா என்பது பெரிய கேள்விக்குறி ஆகும். காரணம் இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு இனச் சிக்கலுக்கு தீர்வு காண எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. இனச் சிக்கலுக்கான தீர்வுபற்றி 1987 ஆம் ஆண்டு தொடக்கம் பல தடவை முயற்சி செய்யப்பட்டன. பல தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடந்தன.

(1) ஆகஸ்ட் 1991 இல், பிரேமதாச - புலிகள் பேச்சுக்கள் முறிந்து ஒரு ஆண்டுக்கு இலங்கையில் அமைதி மற்றும் அரசியல் உறுதித்தன்மையை அடைவதற்கான வழிகளை ஆராய்வதற்காக மங்கள முனசிங்க தலைமையில் 45 பேர் அடங்கிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு நிறுவப்பட்டது.
(2) 1989 மே மாதம் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடங்கப்பட்டன, ஆனால் சனாதிபதி பிரேமதாசாவும் புலிகளும் **IPKF** திரும்பப் பெறுவதை கட்டாயப்படுத்தும் உடனடி அரசியல் நோக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் வரை மட்டுமே பேச்சுவார்த்தை நீடித்தது. மார்ச் 1990 இல், **IPKF** தீவை விட்டு வெளியேறியது. யூன் மாதம், பேச்சுவார்த்தை முறிந்தது ஈழப்போர் ஐஐ தொடங்கியது.
(3) 2002 டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுகளின் முடிவில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தொடக்க ஏற்பாடாகத் தங்களுக்குள் ஏற்பட்ட இணக்கம் குறித்து இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் வெளியிட்ட கூட்டு அறிவிப்பு. அதில் குறிப்பிட்ட "உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில், ஐக்கிய இலங்கைக்குள் சம்'டி ஆட்சிமுறை தழுவிய தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு" இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது.
(4) 2006 யூலை மாதம் 11 ஆம் நாள் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த இராசபக்சாவினால் **APRC** நிறுவப்பட்டது. இதன் தலைவராக பேராசிரியர் திஸ்சா விதாரண நியமிக்கப்பட்டார். இந்தக் குழு சமர்ப்பித்த பரிந்துரைகளையிட்டு ஆலோசன வழங்க பேராசிரியர் திஸ்ச விதாரண தலைமையில் 17 பேர் கொண்ட நிபுணர் குழு நியமிக்கப்பட்டது.
(5) 2006 டிசம்பரில் பெரும்பான்மை, சிறுபான்மை அறிக்கை என இரண்டு அறிக்கைகளை நிபுணர் குழு தயாரித்தது. திஸ்ஸ விதாரண இந்த அறிக்கைகளை ஒன்றிணைத்து "எதிர்கால அரசியலமைப்பின் அடிப்படையை உருவாக்குவதற்கான முக்கிய முன்மொழிவுகளை" (விதாரண முன்மொழிவுகள் என்றும் அழைக்கப்படுகிறது) ஜனவரி 2007 இல் உருவாக்கினார்.
(6) 2009 இல் ஜனாதிபதி குமாரதுங்க புதிய அரசியலமைப்பு வரைவை (பிரதேசங்களின் ஒன்றியம்) நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவை விலக்கிக் கொண்டது. வரைவு மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபோது அது தானாகவே காலாவதியானது.
(7) 2016 ஏப்ரில் மாதத்தில் இல் இலங்கை நாடாளுமன்றம் இனச்சிக்கலுக்கு தீர்வுகாணும் முகமாக ஒரு அரசியல் அமைப்பு அவையை உருவாக்கியது. இதன் இடைக்கால அறிக்கை 30-10-2017 இல் சமர்ப்பிக்கப்பட்டது. ஒரு யாப்பு வரைவு சனவரி 2020 இல் பிரதமர் விக்கிரமசிங்க அவர்களால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது.
(8) செப்தெம்பர் 2021 சனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையில் புதிய யாப்பை உருவாக்க நியமிக்கப்பட்ட 9 பேர் கொண்ட நிபுணர் குழு.

மேலே குறிப்பிட்ட குழுக்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் சனாதிபதி செயலகத்திலும் அலரிமாளிகையிலும் தூசு பிடித்துக் கிடக்கின்றன. இந்த ஆணைக் குழுக்களுக்கு வெலவழித்த பணம், நேரம், உழைப்பு விழலுக்க இறைத்த நீராக வீணாகிவிட்டது.

இப்போது எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க ஏறி விழப் போகிறார? என்பதே கேள்வியாகும். இனச் சிக்கலுக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் அதற்காக சர்வ கட்சிகளது மாநாடு கூட்டப்பட வேண்டும் என்ற யோசனையை விக்கிரமசிங்க அவர்கள்தான் முதலில் முன்மொழிந்தார்.

நொவெம்பர் மாதம் 23 ஆம் திகதி வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு முடிவடைந்த கையோடு "நாம் அனைவரும் ஒன்றிணைந்து இனச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வைக் காண்போம். வரும் 11 ஆம் தேதிக்கு பிறகு கூட்டப்படும் கூட்டத்தில் பங்கேற்க அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைக்கிறேன்" என அவரது ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டது.

மிண்டும் சனாதிபதி ஊடகப் பிரிவு டிசெம்பர் 13 இல் விடுத்த செய்தி அறிக்கையில் "2023 ஆம் ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டத்திற்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். எதிர்வரும் 75 ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்திற்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டுமென சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்."
இந்த அறிக்கைகள் இலங்கைத் தீவில் புரையோடிப் போய்விட்ட இனச் சிக்கலுக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றைக் காண்பதில் இரணில் விக்கிரமசிங்க கரிசனையாக இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. அதே நேரம் நாடாளுமன்றத்தில் கண்ணே கண்ணு என்று ஒரேயொரு உறுப்பினரை வைத்துக் கொண்டுள்ள விக்கிரமசிங்க அவர்களால் அது முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது. ஒரு புதிய யாப்பை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு அதாவது 150 பெரும்பான்மை வாக்குகள் தேவையாகும்.

சனாதிபதி விக்கிரமசிங்க அவர்களோடு ததேகூ நடத்தும் பேச்சு வார்த்தை இரண்டு கட்டமாக நடைபெற இருக்கிறது. முதல் கட்டமாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு உடனடித் தீர்வு காணவேண்டும் எனக் கேட்டுள்ளது.

(1) தமிழர்களது காணிகளை இராணுவம் மற்றும் கடற்படை கையகப்படுத்தும் எத்தனம் கைவிடப்பட வேண்டும்.

(2) போருக்குப் பின்னர் இராணுவத்தின் பிடியில் இருக்கும் சுமார் 28,000 ஏக்கர் காணிகள் அதன் சொந்தக்காரர்களுக்கு கையளிக்கப்பட வேண்டும்.

(3) எஞ்சியுள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப் படவேண்டும்.

(4) வலிந்து காணாமல் போனோர் தொடர்பாக பொறுப்புக் கூறல் வேண்டும்.

(5) அரசியல் யாப்பின் 13ஏ திருத்தம், காணி உட்பட, முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும்.

இறுதியாகத் தமிழர்களது (முஸ்லிம்களது) பூர்வீக வாழ்விடமான வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைத்து உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சம்'டி கட்டமைப்பை உருவாக்க வேண்டும். சம்'டி அரசுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்கள் மத்திய அரசு மீளப்பெறாதவாறு இருக்க வேண்டும்.

படையினர், வனவிலங்கு திணைக்களம் மற்றும் தொல் பொருள் திணைக்களங்கள் புதிது புதிதாக தமிழ்மக்களது காணிகளை கைப்பற்ற எடுக்கும் அடாவடித்தனங்கள் தொடர்கிறது. எடுத்துக் காட்டாக நேற்று (சனவரி 04) மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் உறங்கும் மாவீரர்களின் வித்துடல்களுக்கு மேலாக மேற்கொள்ளப்படும் மர நடவடிக்கைக்கு எதிராக அந்த ஊர் மக்கள் பாரிய எதிர்ப்பைக் காட்டியுள்ளார்கள். இராணுவம் மற்றும் வன விலங்கு திணைக்களம் நட்ட பெயர்ப் பலகைகளையும் மரங்களையும் மக்கள் புடுங்கி எறிந்துள்ளார்கள்
முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632ஏக்கர் பூர்வீக காணிகளை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. அங்கே ஒரு பவுத்த விகாரை இராணுவத்தின் உதயோடு கட்டப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமுக்கான காணி அளவிடும் நடவடிக்கை சென்ற மாதம் முன்னெடுக்கப்பட்ட போது பொதுமக்களால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது. இது போன்ற இராணுவத்துக்கும் தமிழ்ப் மக்களுக்கும் இடையிலான 'போர்" பல மாவட்டங்கனில் தொடர்ந்து நடைபெறுகிறது.

அரசியல் தீர்வு விவகாரம் உள்ளிட்ட ஏனைய விடயங்களிலும் முன்னேற்றம் இல்லை எனில் நாம் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதா? இல்லையா? என்பது தொடர்பில் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டி வரும் என்பதை சனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக ததேகூ இன் தலைவர் சம்பந்தன் கூறியுள்ளார்.

இதே சமயம் நலம் விசாரிக்கச் சென்ற முன்னாள் சனாதிபதி இராசபக்' அவர்களிடம் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்கள் எதிர்நோக்கியுள்ள தேசியப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். இது தொடர்பாக சனாதிபதி இரணில் விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடல்களை நடத்தி, சுமுகமான தீர்வை பெற்றுக்கொடுக்க முயற்சிப்பதாக முன்னாள் சனாதிபதி மகிந்த இராசபக்' இரா.சம்பந்தனிடம் உறுதியளித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இனச் சிக்கலுக்குத் தீர்வாக அதியுச்ச அதிகாரப் பகிர்வை தான் ஆதரிப்பதாகச் சொல்லுகிறார்.



ஆனால் அது ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை இட்டுள்ளார்.

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் தரப்புக்கும் - அரசுக்கும் இடம் பெற்ற பேச்சு வார்தைகள் தோல்வி அடைந்துள்ளன. ஆனால் இன்று இலங்கை ஒரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. அதில் இருந்து மீள வேண்டும் என்றால் தேசியச் சிக்கல் **(National Question)** சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும். இலங்கையில் அரசியல் உறுதித்தன்மையை மேற்குலக நாடுகள், இந்தியா மற்றும் அனைத்துலக நாணய நிதியம் வற்புறுத்துகின்றன.

பேச்சு வார்த்தை காயா பழமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!



# கனடா தமிழர் மரபியல் நடுவம் நடத்தும் தமிழ் மரபுத் திங்கள் தொடக்க நாள்

கனடா தமிழர் மரபியல் நடுவம் நடத்தும் தமிழ் மரபுத் திங்கள் தொடக்க நாள் வைபவம் எதிர்வரும் 07-01-2023 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

அன்று தமிழ் மரபுத் திங்கள் பாதாதையும் வெளியிடப்படவுள்ளது. அனைவரும் கலந்து கொள்ளுமாறு . அழைக்கப்பெறுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு இங்கு காணப்பெறும் அறிவித்தலைப் பார்க்கவும்.




# சமூகத் தொண்டர் மயிலிட்டி அ. குணபாலசிங்கம் அமரரானார்



வலி வடக்கு மீள் குடியேற்ற செயல் வீரரும் சமூகத் தொண்டரும் மீனவச் சமூகத்தின் உரிமைகளுக்காகப் போராடியவருமான மயிலிட்டி அ. குணபாலசிங்கம் அமரரானார் என்ற செய்தி அவரை நேசித்தவர்கள் வாழும் உலகெங்கும் விரிந்து நிற்கின்றது.

அன்னாரை எனது மாணவப் பருவத்திலிருந்தே நன்கு அறிவேன். காங்கேசன்துறை அமெரிக்க மிஷன் பாடசாலையின் முக்கியமான பழைய மாணவர்களில் ஒருவரும் பிரபல மீனபிடித் தொழில் சம்மாட்டியாருமான திரு. அருணாசலம் அவர்களின் மூத்தவாரிசுமாவார்.

பள்ளி நாட்களில் தலைமை ஆசிரியராகவிருந்த திரு. ரிச்சார்ட் சுப்பிரமணியம் அவர்களின் தலை சிறந்த மாணவத் தலைவராகவும் சுறுசுறுப்பான இளைஞராகவும் வலம் வந்தவர் இந்தப் பெருமகன். தமிழீழம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிய காலத்திலும் பின்னர் வடக்கு ஆளுனர் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அரசாங்க அதிபர் தொடக்கம் அரசியல் தலைவர்களுடனும் அரச அதிகாரிகளுடனும் தொடர்புகளைப் பேணியவண்ணம் தனத சமூக மக்களுக்காக குரல் கொடுத்தவர் அமரர் மயிலிட்டி அ. குணபாலசிங்கம் அவர்கள்.

மக்களின் காணிகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்டு அவர்கள் மீளக்குடியேறுவதற்கு வழிசமைத்தவர் செயல் வீரர் மயிலிட்டி அ. குணபாலசிங்கம் என்றால் அது மிகையாகாது.

அவரத மறைவானது காங்கேசன்துறறு மயிலிட்டி வாழ் மக்களுக்கும் வலிவடக்கு மீள்குடியேற்ற வாசிகளுக்கும் பேரிழப்பாகும்.அத்துடன் அன்னாராது பொது வாழ்வானது எவராலும் மறக்க முடியாத பெருமை மிகு பெருவாழ்வாகும்.

இங்கே காணப்படும் படத்தில் 2015ம் ஆண்டில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வீணைமைந்தன் அவர்களின் நூல் வெளியீட்டு விழாவில் மயிலிட்டி அ. குணபாலசிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களிடமிருந்து நூல் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதைக் காணலாம்.

**கே. ரி. சண்முகராஜா (வீணைமைந்தன்) - கனடா**

# கடந்தவையும் கடப்பவையும் (40)

***பாசறை என்றவுடன் பலருக்கும் நினைவில் வரும்***
***மோசமான ஆயுதங்கள் உள்ள இடம்***

*காடழித்து கடல்போல் காட்டாற்றைச் சுற்றிவர*
*ஓடவிட்டு உயர்ந்த முள்வேலிச்*
*சுற்றுமதில் மத்தியிலே ஒரு வீடு*
*தற்காலியமாய் கட்டப்படும் பாடிவீடு - இது*
*சங்கத்து முல்லைப்பாட்டு காட்டிநிற்கும் பாசறை*
*எங்கள் இடங்களிலும் பாசறைகள் பல*
*நாங்கள் வாழ்ந்த காலத்தில் கண்டதுண்டு*
*நீங்களும் கண்டிருக்க வாய்ப்பிருக்கு - ஆனாலும்*
*ஆரம்பகாலத்துப் பாசறையின் வாசத்தை சுவாசித்த*
*அனுபவத்தைச் சொல்வதற்காய் ஆசை கொண்டே அழைத்து வந்தேன்*
*ஆம் அன்றும்,*
*சீருடைகள் வரவில்லை வாகனங்களும் அதிகமில்லை*
*யாருமில்லா வீடொன்று பாசறை - அங்கு*
*கொண்ட குறிக்கோளுக்காய் யாவரும்*
*ஒன்றுகூடி வகுப்பராம் திட்டங்கள்*
*ஆரம்ப காலம் என்பதனால் எங்கும்*
*பரபரப்பாய் அவர்களையே கதைப்பார்கள்*
*பள்ளிச் சிறார்கள் சென்றுவரும் பாதையது ஆதலால் - அவ்வப்போது*
*மெள்ளமாய் திரும்பி உள்ளே பார்ப்பதுண்டு - அங்கு*
*அதிகாலை வேளையிலும் அந்திமாலைப் பொழுதினிலும் - முற்றமதை*
*சிறிதேனும் சோர்வின்றிச் சுத்தமாகக் கூட்டுவார்கள் - பின்*
*மஞ்சள் நீர்தெளித்து சாம்பிராணித் தூபம் காட்டி*
*நெஞ்சில் விடுதலை உணர்வூட்ட*
*'அச்சம் என்பது மடமையடா' எனும் பாட்டை - பெரும்*
*சத்தமாகப் போடுவார்கள்*
*சுத்தமான அவ்வீட்டின் பெருங்கதவோ*
*நித்தமும் திறவாது பெரிதாய் - அங்கு*
*பெரியவர்கள் யாரேனும் வரும்போதே*
*பெருங்கதவு விலகியங்கு உள்நுளைய இடங்கொடுக்கும் - அன்று*
*பாசறையில் சமைப்பதில்லை - நல்ல*
*ஆதரவு உள்ளவர்கள் உளமுவந்து உணவளிப்பர்*
*தூக்குவாளிகளில் உட்செல்லும் உணவுவகை - அன்றைய*
*தாத்தாக்களும் பாட்டிகளும் சத்தமன்றி சமைத்தளிப்பார்*
*மெத்தப் பெரு விருப்போடு - தாம்*
*பெற்றெடுத்த பிள்ளைகள் போல் பார்த்துவந்தார் காத்தும் வந்தார்*
*'அம்மா ஐயா' என்ற அன்பான அவர் அழைப்பு*
*மெய்யாவே நெஞ்சமதைத் தொடுவதுண்டாம் - பின்னாளில்*
*ஓரிடத்தில் அவர் இருந்து உண்ணமுடியா*
*பேரிடர் வந்த வேளையிலும்*
*ஆகாய விமானங்கள் அத்தனை வக்கிரமாய்*
*போவோர் வருவோர் மீதெல்லாம்*
*குண்டுகளைப் போட்ட போதும்*
*சண்டையில் நிற்பவர் உண்பதற்காய்*
*இன்று இல்லாத் தாத்தாவும் பாட்டியும்*
*அன்று இடங்குறித்து உணவுதனை உவந்தளித்தார்*
*குண்டு மழையால் பழைய பாசறை*
*நின்று நிலைக்க முடியாது போகவே*
*கொண்ட வீச்சோடு அண்டை அயல்களில்*
*சண்டைப் பயிற்சிக்காய் புதுப்பாசறைகள் பல அமையத்தொடங்கின...*

(தொடரும்) **-- உமா மோகன் - Montreal- Canada --**

# அகணி சுரேசுக்கு வாழ்த்துப்பா

*சுந்தர நாமம் சூடிய சுரேஷ்*
*வந்து உதித்தார் வரங்கள் பெற்றே*
*அகணி என்ற அவதாரம் எடுத்தே!*
*பகலவன் போலவே பாரினில் தோன்றினார்.*
*பணிகள் பலவும் பாங்காய்ப் புரிந்துமே!*
*கணினி என்ற கல்வியைக் கருத்தொடு*
*கற்றுத் தந்த களங்மிலாக் குருஅவர்*
*சற்றும் தளராத சரித்திர நாயகன்.*
*எதுகை மோனை இலக்கணக் கவியையும்*
*புதுக்கவிதை என்ற புதிய வடிவையும்*
*புரியும்படிச் சொல்லிப் புகட்டிய புனிதனை.*
*மரியாதை செய்து மகிழ்வு கொள்வோம்*
*சோதனைகள் பலவந்து சோதித்த போதுமே!*
*சாதனைகள் பலவற்றைச் சாதித்துக் காட்டியவர்.*
*உலகச் சாதனையை ஊரறியச் செய்தே!*
*பலரின் பாராட்டைப் பாரினில் பெற்றவர்*
*கட்டுரை கவிதை கதையில் கால்வைத்து*
*எட்டுத் திக்கும் ஏறியே இறங்கியவர்*
*அன்னார் செய்த அருமைச் சாதனையை*
*இன்நாள் பாராட்டி இறையருள் நாடுவோமே!*

-------------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# சரணடைந்தவர்கள் என்ன ஆனார்கள், உண்மைகள் வெளிவருமா?

**சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்**



## ‘Light at the end of the Tunnel’

நம்பிக்கையூட்டும் ஒரு சாத்தியம் இருக்கலாம் என்பதை உணர்த்தும் இந்த ஆங்கில பழமொழி பலருக்கு ஒரு ஆறுதலை அளிக்கும். நம்பிக்கையையும் மீறிய நம்பிக்கை என்றாலும் சில சமயங்களில் அத்தி பூத்தாற்போல் வரும் செய்திகள் இனி வழியில்லை என்று விழுந்து கிடப்பவனுக்கும் ஒரு சிறிய நம்பிக்கையை ஏற்படுத்தும்.

எண்ணமே வாழ்வு-நம்பிக்கையே வெற்றி என்பது தமிழர்களின் அடிப்படை சிந்தனைகளில் ஒன்று என்று எனது பாடசாலை நாட்களில் ஆசிரியர் கூறியது இப்போதும் நினைவில் உள்ளது. சுமார் 45 ஆண்டுகளிற்கு முன்னர் பாடசாலை கற்கையை நிறைவு செய்து கல்லூரிக்குள் காலடி எடுத்துவைப்பதற்கு முன்னர் சக ஆசிரியர்களிடம் பல வண்ணத்தில் இருக்கும் சிறிய “ஆட்டோகிரா∴ப் நோட்புக்கை அதில் ஆசிரியர்களின் வாழ்த்தை அவர்களின் கையொப்பத்துடன் பெற்று காலங்காலமாக அதைப் பாதுகாத்து வைக்கும் மரபு இன்றும் உள்ளது. அவ்வகையில் எனது தமிழாசிரியர் என்னை ஆசீர்வதித்து வாழ்த்திக் கையெழுத்திட்டு அதற்கு கீழே “எண்ணமே வாழ்வு-நம்பிக்கையே வெற்றி” அதை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.....வாழ்க.....என்று எழுதியிருந்தார். ஐயா சந்திரசேகர் எங்கிருந்தாலும் வணங்கி மகிழ்கிறேன். அப்படியான ஒரு நம்பிக்கையை தமிழ் ஊடகவியலாளர் ஒருவரும் மூத்த சட்டத்தரணி ஒருவரும் காணாமல் போனவர்களின் நெஞ்சங்களில் விதைத்துள்ளார்.

“தமிழீழ விடுதலைப் புலிகள் எவரும் இராணுவத்திடம் சரணடையவில்லை இலங்கை அரசாங்கத்திடமே சரணடைந்தார்கள்” இப்படி ஒரு புது உருட்டை இராணுவம் தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தமிழ் ஊடகவியலாளர் பாலகிருஷ்ணன் நிரோஷ்குமார் கேட்டிருந்த கேள்வியொன்றிற்குப் பதிலளித்த போதே இலங்கை இராணுவம் இப்படி திருவாய் மலர்ந்துள்ளது அல்லது உளறியுள்ளது என்று கருதலாம்.

அதே போன்று கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மூத்த சட்டத்தரணி கே எஸ் ரட்ணவேல் அவர்கள் முன்னிலையாகியிருந்த வழக்கு ஒன்றில் வவுனியா மேல் நீதிமன்றம் முக்கியமானதொரு தீர்ப்பை அளித்திருந்தது. செல்லையா விஸ்வநாதன் என்கிற முன்னாள் போராளியின் மனைவி தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையின் போதே நீதிபதி மிகவும் முக்கியமான தீர்ப்பை அளித்திருந்தார். அதாவது எதிர்வரும் மார்ச் மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள அடுத்த விசாரணையின் போது இராணுவத்தினரிடம் கையளித்துக் காணாமல் போன நபரை நீதிமன்றத்தில் முன்நிறுத்த வேண்டும் அல்லது அப்படிச் செய்ய முடியாமைக்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

“இது இறுதிக்கட்டப் போரின் போது காணாமல் போனவர்கள் அல்லது இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு அல்லது சரணடைந்த அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான விடயத்தில் மிகவும் முக்கியமானதொரு தீர்ப்பாகும். இது காணாமல் போனவர்களைத் தேடும் உறவினர்களுக்கு நம்பிக்கையும் ஆறுதலையும் அளிக்கும். மேலும் பலருக்கு இந்த தீர்ப்பு ஒரு முன்னுதாரணமாக இருக்கும்” என்று மூத்த சட்டத்தரணி கே எஸ் ரட்ணவேல் ஊடகங்களிற்கு அப்போது கூறியிருந்தார்.

ஆட்கொணர்வு மனு ஒன்றின் மீதான விசாரணையிலேயே நீதிபதி அந்த தீர்ப்பை அளித்திருந்தார். அடுத்த விசாரணை அன்று இராணுவம் என்ன செய்யப் போகிறது என்ற



பரபரப்பு நாளுக்கு நாள் ஓங்கி வருகிறது.

அவரைப் போலவே தமிழ் ஊடகவியலாளர் நிரோஷ்குமார் பல நெருக்கடிகளுக்கு இடையே சிறப்பான ஒரு பணியைச் செய்துள்ளார். இலங்கையில் மக்களுக்கு ஒரு ஒளிவிளக்காக-மிகவும் காத்திரமாக இல்லையென்றாலும்-தகவல் அறியும் உரிமைச் சட்டம் அண்மைக் காலத்தில் மிகுந்த பயனுள்ள ஜனநாயக ஒரு வழிமுறையாகவும் ஆயுதமாகவும் பயன்பட்டு வருகிறது. அந்த ஜனநாயக ஆயுதத்தை பயன்படுத்தி தமிழ் மக்களின் மனங்களில் சிறிதளவேனும் நம்பிக்கையை அவர்கள் விதைத்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சரணடைந்த விடுதலைப் புலிகள் குறித்து ஆதாரமான தகவல்களுடன் அதற்கான பதிலை இராணுவத்திடமிருந்து கோரியிருந்தார். அதற்கான பதிலை இழுத்தடித்த இராணுவம் பின்னர் இப்படியும் இல்லை அப்படியும் இல்லை என்று யாருக்கும் புரியாத ஒரு பதிலை அளித்தது. அற்புதமான அந்த பதில் தான் “தமிழீழ விடுதலைப் புலிகள் எவரும் இராணுவத்திடம் சரணடையவில்லை இலங்கை அரசாங்கத்திடமே சரணடைந்தார்கள்”.

இந்த பதிலைக் கேள்விப்பட்டவுடன் எனக்குள் எழுந்த முதல் கேள்வி இராணுவம் அரசாங்கத்தின் ஒரு அங்கமா இல்லையா என்பதே! அடுத்ததாக எழுந்த கேள்வி என்பது இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற சமயத்தில் நானறிந்த வகையில் அங்கு அரசு என்றால் பொதுவாக அறியப்படுகின்ற சிவிலியன் அதிகாரிகள் யாரும் இருக்கவில்லை. எளிமையாகச் சொல்ல வேண்டுமானால் இறுதிக்கட்டப் போரில் அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்ச, ஐ நா, ஐ சி ஆர் சி, உலக உணவுத் திட்டம், ஊடகவியலாளர்கள் என அனைவரையும் 2009 ஜனவரி மாதம் தொடங்கி படிப்படியாக வெளியேற்றினார். அரச அதிகாரிகளும் பெரும்பாலானவர்கள் வெளியேறிவிட்டனர். சொற்ப எண்ணிக்கையிலான மருத்துவர்கள் மட்டுமே அங்கிருந்தனர். எனவே அவர்கள் “இலங்கை அரசாங்கத்திடமே சரணடைந்தார்கள்” என்று



இராணுவம் கூறுவதன் அர்த்தம் என்ன?

அப்படி இராணுவம் கூறும்படி அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டம் அல்லது முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து வெளியேறிய மக்கள் சிவில் அதிகாரிகளிடம் சரணடைந்திருந்தால் அதற்கான முறையான பதிவுகள் இருந்திருக்கும் அல்லது இருந்திருக்க வேண்டும். அப்படியானால் அவை எங்கே? தமிழீழ விடுதலைப் புலிகள் அரச அதிகாரிகளிடமே சரணடைந்தார்கள் என்றால், அந்த அதிகாரிகள் பெயர்கள் மற்றும் அவர்கள் அப்போது என்ன பதவியில் இருந்தார்கள் என்பதெல்லாம் அரசிடம் இருக்கும்/இருக்க வேண்டும். அது ஒன்றும் இரகசியமான தகவல் இல்லை. அப்படியிருக்கும் போது அதை அரசு ஏன் இதுவரை வெளியிடவில்லை? இப்படி ஏராளமான கேள்விகள் எழுவது இயற்கை.

சரி, இப்போது இராணுவம் கூறியிருக்கும் பதிலிற்கு மீண்டும் வருவோம். அதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் ஆட்கள் சரணடைந்தார்கள் என்பதை இராணுவம் மறுக்கவில்லை. இதுவரை காலமும் அதை வெளிப்படையாக இராணுவம் ஒப்புக் கொண்டதாக நான் அறியவில்லை. தம்மிடம் சரணடையவில்லை என்கிற வாதத்தையே மிகவும் கவனமாகவும் புத்திசாலித்தனமாகவும் முன்வைத்துள்ளதாக இராணுவம் கருதுகிறது. ஆனால் அது “பொறியில் சிக்கிய எலியின் கதை” தான்.

இனி, ஆட்கள் சரணடையவில்லை அல்லது தங்களிடம் கையளிக்கப்படவில்லை என்கிற பழைய பல்லவியை இராணுவம் பாட இயலாது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அந்த தமிழ் ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு, “பொறுப்பு வாய்ந்த இராணுவம் என்கிற வகையில் முழுமையான, சரியான தகவல்களை இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக” இலங்கை இராணுவம் அதிகாரபூர்வமாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஆணையத்திற்கு அறிவித்துள்ளது.

முதலில் தகவல்களைத் தரவே இராணுவத்தரப்பு மறுத்துவிட்டது. அதேவேளை அந்த தகவலை வேண்டி பிரதமர் அலுவலகத்திற்கும் அனுப்பப்பட்டது. அங்கிருந்து பாதுகாப்பு அமைச்சிற்கு சென்றது. பாதுகாப்பு அமைச்சு அந்த தகவல்கள் இலங்கை இராணுவத்திடமே இருப்பதாகக் கூறி இராணுவத்திற்கு அந்த விண்ணப்பத்தை அனுப்பியது. இதை பாதுகாப்பு அமைச்சு அளித்த ஒப்புதல் வாக்குமூலமாகவே பார்க்க வேண்டியுள்ளது. அதன் பிறகும் உரிய பதில் இல்லாததால் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இதையடுத்து 1111/2022 என்ற இலக்கத்தைக் கொண்ட தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழான மேல்முறையீடு, அந்த ஆணைக் குழுவின் தலைவர் நீதியரசர் உபாலி அபேவர்த்தன தலைமையில் இம்மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது தான் “விடுதலைப் புலிகள் தம்மிடம் சரணடையவில்லை மாறாக அரசிடமே சரணடைந்தர்




என்கிற “உண்மையை” போட்டுடைத்துள்ளனர்.

“பொறுப்பான” இராணுவம் கூறியுள்ளபடி 17ஆம் திகதியன்று அவர்கள் என்ன பதிலளிக்கப் போகிறார்கள் என்பதை தமிழுலகமே ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கிறது. அதேவேளை தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களில் வருவது போல் இராணுவம் ஒரு “டிவிஸ்ட்டையும்” வைத்திருக்கக் கூடும். போர் முடிந்த பிறகு புனர்வாழ்விற்கு அனுப்பப்பட்டவர்களே சரணடைந்தவர்கள், புனர்வாழ்விற்கு பிறகு அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர் என்றும் மேலதிகமாக காணாமல் போனவர்கள் என்று கூறப்படுபவர்கள் வெளிநாடுகிளிற்குச் சென்றுவிட்டனர் என்று கூறும் வாய்ப்பும் உள்ளது என்று விவரமறிந்த வட்டாரங்கள் கனடா உதயனிடம் தெரிவித்தன. அதேவேளை இப்படியான தகவல்களைக் கோருவதும், அதை அளிப்பதும் “தேசியப் பாதுகாப்புடன்” தொடர்புடையது என்று கூறி, அரசு சட்ட மாஅதிபரிடம் கருத்துக் கேட்க முற்படலாம். அவரிடமிருந்து பதில் வர ஆண்டுக் கணக்கிலும் காலம் ஆகலாம்.

இறுதிக்கட்டப் போரானது “சாட்சியம் இல்லாத போராக” இருந்த நிலையில், “அரசிடம்” சரணடைந்தவர்கள், இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்கள் அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர் என்பதில் சரியான கணக்கீடுகள் இல்லை. சரணடைந்தவர்கள்/ கையளிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆகியோர் அளித்த தகவல்களின் அடிப்படையிலேயே அந்த எண்ணிக்கை தரவுகள் பேசப்படுகின்றன. எனினும் அந்த எண்ணிக்கை




எவ்வளவு என்பது சரியாகவும் உறுதியாகவும் தெரியவில்லை.

பொருளாதார ரீதியில் இலங்கை மிகவும் பலவீனமாக உள்ள நிலையில், எந்தவொரு பன்னாட்டு உதவியும் மனித உரிமைகள் விஷயத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவை. அதை இதுவரை இலங்கை அரசு உணர்ந்ததாகத் தெரியவில்லை. போர்க்காலத்தில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல் போனவர்கள் குறித்து இதுவரை எந்த வகையிலும் பொறுப்புக்கூறல் இல்லை. காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் ஓ எம் பி இதுவரை காணாமல் போனதாகக் கூறப்படும் ஒருவரைக் கூட கண்டுபிடிக்கவில்லை. அண்மையில் அவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பயணித்த போது அவர்களுக்கு வரவேற்பை காட்டிலும் எதிர்ப்பே அதிகமாக இருந்தது.

இப்போது “வாராது வந்த மாமணி” போன்று ஒரு நீதிமன்ற உத்தரவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பமும் ஓரளவேனும் உண்மையை அறிந்துகொள்ள உதவும் என்று பாதிக்கப்பட்டவர்களைப் போலவே நானும்

# “நாங்கள் மதவாதத்திற்கே எதிரிகள்... மதத்திற்கு அல்ல” முதல்வர் ஸ்டாலின்

“நாங்கள் மதவாதத்துக்குத்தான் எதிரிகளே தவிர, மதத்திற்கு எதிரிகள் அல்ல. இதை அறியவேண்டியவர்கள் அறிந்து கொண்டால் போதும்“ என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.சென்னை, வில்லிவாக்கம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில் மைதானத்தில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 1250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1250 கிராமப்புற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள ரூ. 2 லட்சம் வீதம் 2500 திருக்கோயில்களுக்கு ரூ. 50 கோடிக்கான வங்கி வரைவோலைகளை வழங்கிடும் அடையாளமாக 18 திருக்கோயில்களைச் சார்ந்த நிர்வாகிகளிடம் வரைவோலைகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை (ஜன.5) வழங்கினார்.

பின்னர் இந்த நிகழ்ச்சியில் முதல்வர் பேசியது: “இன்றைக்கு திராவிடம் என்ற சொல்லைப் பிடிக்காதவர்கள், என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எங்களை மதத்தின் விரோதிகளாகச் சித்தரிக்கிற முயற்சிகளில் நிறைய ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் மிகுந்த பணிவோடு இந்த விழாவின் மூலமாக தெரிவிக்க விரும்புவது, நாங்கள் மதவாதத்துக்குத்தான் எதிரிகளே தவிர, மதத்திற்கு எதிரிகள் அல்ல. இதை அறியவேண்டியவர்கள் அறிந்து கொண்டால் போதும், இந்த நிகழ்ச்சியின் மூலமாக அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை இந்த நிகழ்ச்சியை நேரடியாக வந்து பார்க்க முடியாது அவர்களால், ஏனென்றால் அவர்கள் மிகப்பெரிய இடத்தில் இருக்கிறார்கள். ஆனால், நிச்சயம் தொலைக்காட்சி மூலமாக பார்த்துக் கொண்டிருப்பார்கள், நாளைக்கு காலையில் பத்திரிகையிலும் பார்ப்பார்கள். ஆக, இதை அவர்கள் உணர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.நம்முடைய திமுக ஆட்சி மலர்ந்ததற்குப் பிறகு, திருக்கோயில்களுக்கு ஏராளமான பணிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இந்த விழா. இந்தத் திருக்கோயில் பணிகளைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால், நாங்களாக எதையும் செய்யவில்லை.

இதற்கான வல்லுநர் குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்த வல்லுநர் குழுவின் ஆலோசனைப்படிதான் இதையெல்லாம் நாம் செய்து கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் 43 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. பழைய நிலையில் இருக்கக்கூடிய அந்தக் கோயில்களை புதுப்பிக்க, அப்படி புதுப்பிக்கும் நேரத்தில், பழமை மாறாமல் அதை சீர்செய்ய குடமுழுக்கு விழாவை நடத்த இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதே போல் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட அடிப்படைப் பணிகள் செய்து தரப்பட்டுள்ளன.திருக்கோயில் பணிகளை மேற்கொள்ள மண்டல, மாநில



அளவிலான வல்லுநர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய ஒப்புதல் பெற்ற பிறகுதான் இந்த செயல்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றன. தற்போது வரை 3986 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்வதற்கு வல்லுநர் குழுவால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களைப் பழமை மாறாமல் சீர்செய்வதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. திருக்கோயில்களுக்கு சொந்தமான திருக்குளங்களைச் சீரமைக்கும் வகையில் கருத்துருக்களை வழங்குவதற்கு சென்னை, கோவை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 4 ஆலோசகர்களும், திருக்கோயில்களிலுள்ள பழமையான மூலிகை ஓவியங்களைப் பாதுகாக்கும் வகையிலான வழிமுறைகளை வழங்குவதற்குத் தனி ஆலோசகரும் நியமிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நம்முடைய இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது, அமைச்சர் சேகர் பாபு ஏராளமான அறிவிப்புகளைச் செய்தார். சட்டமன்றத்தில் அறிவிக்க நேரம் இல்லாமல் முக்கியமானதை மட்டும்தான் அறிவித்தார். மற்றவைகளை, பேசியதாக பதிவு செய்ததாக அவர் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்.இந்த நிகழ்ச்சிக்கு தயாராகும்போது, அப்படி அறிவிக்கப்பட்டதில் எத்தனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அமைச்சர் சேகர்பாபுவிடம் நான் கேட்டேன். அவர் சொன்னார்,20212022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 112 அறிவிப்புகளில் 91 அறிவிப்புகளின் மூலமாக 3,769 திருக்கோயில்களில் திருப்பணிகளும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.20222023 ஆம் ஆண்டிற்கான 165 அறிவிப்புகளில் 135 அறிவிப்புகளின் மூலம் 2578 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது ஞ் என்றும் பெருமையோடு எடுத்துச் சொன்னார்.

1250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளையும் சேர்த்து, இந்த நிதியாண்டில் மட்டும் 5078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. அதைத்தான் நம்முடைய அரசு விரும்புகிறது, இதுதான் நம்முடைய அரசினுடைய நோக்கம்.திருவாரூரில் பல்லாண்டு காலமாக ஓடாத இருந்த தேரை ஓட வைத்த பெருமை யாருக்கு என்று கேட்டீர்களானால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குத் தான். தேர் வரும் பாதையைச் சுற்றிலும் சாலைகள் அமைக்கப்பட்டன. தேர் ஓடுவது சில நாட்கள்தான், ஆனால் மக்கள் 365 நாளும் தொடர்ந்து அந்த சாலையைப் பயன்படுத்துகிறார்கள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களை மேடையில் வைத்துக் கொண்டே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.கோயில்கள் நமது கலைச் சின்னங்களாக, பண்பாட்டுச் சின்னங்களாக இருக்கின்றன. நமது சிற்பத்திறமைக்கான சாட்சியங்களாக இருக்கின்றன. நமது கலைத் திறமைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

எனவே, கண்ணும் கருத்துமாக அதைக் காப்பது நம்முடைய அரசினுடைய கடமை என்று எண்ணிச் இன்றைக்கு நாம் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். அத்தகைய கோயில்கள் சமத்துவம் உலவும் இடங்களாக அமைய வேண்டும் என்பதிலே நமது முழு கவனம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.எந்த மனிதரையும் சாதியின் பேரால் தள்ளி வைக்கக் கூடாது. நன்றாக கவனியுங்கள், எந்த மனிதரையும் சாதியின் பேரால் தள்ளி வைக்கக் கூடாது. அதற்குத்தான் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை நாம் கொண்டு வந்தோம். அன்னைத் தமிழ் மொழி ஆலயங்களில், நம்முடைய தமிழ் மொழி ஒலிக்க வேண்டும் என்ற உத்தரவையும் போட்டு இருக்கிறோம். சமூக சமத்துவம் கொண்டவைகளாக நமது ஆலயங்கள் திகழ வேண்டும்.மனிதர்களில் மட்டுமல்ல கோயில்களிலும் நகரக் கோவில் கிராமக் கோவில் என்றும் பணக்காரக் கோயில் ஏழை கோவில் என்றும் வேறுபடுத்திச் சொல்லப்படுகிறது. கிராமப்புறக் கோயிலாக இருந்தாலும் ஏழ்மையான கோயிலாக இருந்தாலும் ஆதிதிராவிடர் பகுதியில் இருக்கும் கோயிலாக இருந்தாலும் அனைத்தையும் ஒன்று போலக் கருதி, உதவி செய்யக்கூடிய அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு.மதம் சாதி வேற்றுமை மட்டுமல்ல கோயில் சாமி வேற்றுமையும் இந்த அரசுக்கு இல்லை. அனைத்து இறைத் தலங்களையும் கண்ணும் கருத்துமாக நாம் இன்றைக்கு கவனித்து வருகிறோம். அதனால்தான் இந்த மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய சமயச் சான்றோர்கள் மட்டுமல்ல, இன்னும் பலரும் இந்த அரசை ஆதரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.எனவே, உங்களுடைய பாராட்டுகளும் எங்களுக்குத் தேவை. நீங்கள் தொடர்ந்து ஊக்கப்படுத்துங்கள். இன்றைக்கு நம்மை ஏளனம் செய்து கொண்டிருக்கக்கூடிய, விமர்சனம் செய்து கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு எல்லாம் இந்த நிகழ்ச்சியே, இந்த மேடையே சாட்சி, சான்று. எனவே, நாங்கள் எந்நாளும் உழைப்போம், எப்போதும் தொடர்ந்து உழைப்போம், எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலை வருகிற வரையில் இந்த திராவிட மாடல் ஆட்சி உழைக்கும்“ என்று அவர் பேசினார்.

# ஒப்பந்த செவிலியர்கள் கோரிக்கைக்காக தமிழக அரசு நாளை 39வது குழுவை அமைக்கலாம்: சீமான் கிண்டல்



“இசுலாமிய கைதிகள் விடுதலைக்கு ஆதிநாராயணன் குழு, சமூக நீதிக்கு ஒரு குழு, மொத்தம் 38 குழு. நாளை இதற்கும் சேர்த்து 39வது குழு வருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது'' என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கிண்டல் செய்துள்ளார்.தமிழகத்தில் கரோனா காலத்தில் பணியமர்த்தப்பட்ட ஒப்பந்த செவிலியர்கள் தங்களை பணி நீக்கம் செய்ததைத் திரும்பப் பெறவும், பணி நிரந்தரம் செய்யக் கோரியும் சென்னை வள்ளுவர் கோட்டத்தில், வியாழக்கிழமை (ஜன.5) உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், “கரோனா காலத்தில் மருத்துவப் பணியாளர்கள் எவ்வளவு அர்ப்பணிப்போடு செயல்பட்டனர் என்பதை அனைவரும் அறிவர். காரணம், கரோனா நோய்த்தொற்றால் இறந்துபோன மருத்துவர்கள், செவிலியர்கள் எண்ணிக்கை அதிகம்.தமிழகத்தின் தற்போதைய முதல்வர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, இந்த செவிலியர்கள் நிரந்தரமாக பணியமர்த்தப்படுவார்கள் என்று வாக்குறுதி அளித்திருந்தார். அதைத்தான் நிறைவேற்றுமாறு கேட்கின்றனர்.

ஆனால், புத்தாண்டு தினத்தில், 2472 செவிலியர்களை பணிநீக்கம் செய்திருக்கும் உத்தரவுதான் இந்தப் போராட்டத்துக்கான காரணம்'' என்றார்.அப்போது இந்தப் போராட்டத்துக்கு அரசு ஒரு ஆய்வுக்குழு நியமிக்குமா என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், “நிச்சயமாக நியமிப்பார்கள். ஏனெனில் ஆசிரியர்களுக்கு நியமித்துள்ளனர். குழு அமைப்பதற்கான நோக்கமே, காலங்கடத்தி அந்த கோரிக்கையை நீர்த்துப் போகச் செய்வதுதான்.இசுலாமிய கைதிகள் விடுதலைக்கு ஆதிநாராயணன் குழு, சமூக நீதிக்கு ஒரு குழு, மொத்தம் 38 குழு. நாளை இதற்கும் சேர்த்து 39வது குழு வருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

பலமுறை கூறிவிட்டேன் புழுக்கள்கூட 4 அங்குலம் நகரும், இந்த குழுக்கள் ஒரு வேலையும் செய்யாது. அது ஒரு ஏமாற்று. வெளிப்படையான கோரிக்கைக்கு எதற்கு குழு?ஆசிரியர்கள் போராட்டத்திற்கு காரணம், திமுக அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக் கோரிதான். தற்போது நடைபெறும் இந்த செவிலியர்களின் கோரிக்கையும், இதேபோல் கடந்தமுறை போராடியபோது திமுக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரிதான். எனவே, வெளிப்படையான கோரிக்கையை வைத்து போராடி வருகின்றனர். அது ஏற்கத்தக்கது. எனவே அதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த வேண்டும். இதற்கு எதுக்காக குழு? இதை செயல்படுத்துவார்கள் என்று நம்புகிறோம். இல்லையென்றால் செயல்படுத்தும்வரை போராடுவோம்'' என்று அவர் கூறினார்.

# அன்பின் தொனி - 675

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**தெய்வீக கட்டளைகள்** - Divine Laws

எம்மைப் படைத்த தேவாதி தேவனைத் தவிர வேறு எந்தப் படைப்புகளையும் நாம் வணங்கக் கூடாதென்பது தேவ கட்டளை, அதற்கு அமைய நாம் நடக்க வேண்டியது எமது கடமை. இந்தத் தெய்வீக நியாயப்பிரமாணத்தை நாம் கடை ப்பிடிக்க வேண்டுமாயின், அந்த திவ்விய கட்டளைகளை சரிவர அறிந்து செயற்படுவது மிகவும் அவசியம். எனவே, பரிசு த்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள திவ்விய தேவ கட்டளைகளை இங்கே பார்க்கலாம்:

A. **முதலாவது கடவுள்** - God First

B. **இரண்டாவது அவர் கட்டளைகள்** - His Commandments

*1. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.*
**- யாத்திராகமம் 20: 3**
*2. கர்த்தர் ஒருவருக்கே ஒழிய வேறே தேவர்களுக்குப் பலியிடுகிறவன் சங்கரிக்கப்படக்கடவன்.* **- யாத்திராகமம் 22: 20**
*3. அந்நிய தேவர்களின் பேரைச் சொல்லவேண்டாம், அது உன் வாயிலிருந்து பிறக்கக்கேட்கப்படவும் வேண்டாம்.* **- யாத்திராகமம் 23: 13**
*4. நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும்,...*
**- யாத்திராகமம் 23: 24**
*5. நீ அவர்களுடைய தேவர்களைப் .. சேவியாமலும்,..*
**- யாத்திராகமம் 23: 24**
*6. நீ அவர்களுடைய ... செய்கைகளின்படி செய்யாமலும்..*
**- யாத்திராகமம் 23: 24**
*7. நீ அவர்களுடைய தேவர்களைப் ... நிர்மூலம்பண்ணி ..*
**- யாத்திராகமம் 23: 24**
*8. நீ அவர்களுடைய ... சிலைகளை உடைத்துப்போடுவாயாக.*
**- யாத்திராகமம் 23: 24**
*9. அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக.* **- யாத்தி. 23: 32**
*10. எனக்கு விரோதமாகப் பாவஞ் செய்யாதே ...* **- யாத்திராகமம் 23: 33**
*11. அவர்கள் உன்னை எனக்கு விரோதமாகப் பாவஞ் செய்ய விடாதே ..*
**- யாத்திராகமம் 23: 33**
*12. அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளவேண்டாம்.*
**- யாத்திராகமம் 34: 14**
*13. அந்தத் தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கைபண்ணாதே ..*
**- யாத்திராகமம் 34: 15**
*14. நீ போய், அவன் பலியிட்டதிலே புசியாதே..* **- யாத்திராகமம் 34: 15**
*15. சோரமார்க்கமாய்ப் அவர்களைப் பின்பற்றாதே..* **- யாத்திராகமம் 34: 16**
*16. உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனை ..*
**- உபாகமம் 6: 13**
*17. அவருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடுவாயாக.*
**- உபாகமம் 6: 13**
*18. உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரிட்சை பாராதிருப்பீர்களாக.*
**- உபாகமம் 6: 16**
*19. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கருத்தாய்க் கைக்கொள்வீர்களாக.* **- உபாகமம் 6: 17**
*20. நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக.* **- உபாக 6: 19**
*21. நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக.*
**- உபாகமம் 6: 5**
*22. என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதிருப்பீர்களாக ..*
**- லேவியராகமம் 22: 32**
*23. உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய்.*
**- உபாகமம் 18: 13**

கர்த்தாதி கர்த்தரும், தேவாதி தேவனும், ராஜாதி ராஜனுமாகிய, இவ்வுலகத்தை உருவாக்கிப் படைத்த மெய்யான கடவுளைக் குறித்த இவ்வளவான விபரங்களையும், அவருடைய தெய்வீக கட்டளைகளையும், பிரமாணங்களையும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து படித்து அறிந்த பின்பும் விக்கிரகங்களையும், மகான்களையும் மகாத்மாக்களையும்ம், புனிதர்களென்றும் பரிசுத்தவான்களென்றும், தெய்வப் பிறவி களென்றும் சொல்லி சுவாசமுள்ள மனிதனையும், மரித்துப்போனவர் களையும் வணங்குவதை உலகில் பல தேசங்களில் இன்றும் காணக்கூடியதாய் இருக்கிறது. இவைகள் எவ்வளவு கவலைக்குரிய நிலை என்பதையும், தேவனுக்குப் பிரியமில்லாத வழிபாடு என்பதையும், மனிதர் உணரமுடியாதபடி சத்துருவான பிசாசானவன் அந்த மக்களுடைய அறிவைக் குருட்டாட்டமாக்கி வைத்திருக்கிறான். இந்த நிலை மாறவேண்டு மாயின் உண்மையான மெய் தேவனை சரிவர அறியவேண்டும், அதை அறிந்து கொள்வதற்கு ஓரே வழி, பரிசுத்த வேதா கமத்தை திறந்த உள்ளத்தோடு படித்து, அதில் காணப்படும் சத்தியத்தைப் புரிந்து அதன்படி நடக்கும்போது இப்படியான தவறான வழிபாடுகளில் ஈடுபடாமல் தவிர்த்துக் கொள்ளலாம். அப்பொழுது தேவ கோபாக்கினையிலிருந்தும் நாம் தப்பித்து, தேவனுக்குப் பிரியமுள்ளவர்களாய் வாழ்ந்து அவருடைய நிறைவான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளலாம்.

**தொடரும்...**



# அனைத்து தமிழ் கட்சிகளையும் ஓரணியில் செயல்படக் கோரி மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் "ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஸ்டியை வலியுறுத்துவதற்கு" அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் திரண்டு செயல்படக் கோரி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களை ஒன்றிணைத்து கவனயீர்ப்பு போராட்டம் வியாழக்கிழமை (5) காலை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் வடமாகாண இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் வியாழக்கிழமை (5) காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை மன்னார் நகர சுற்று வட்ட பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகள் இடையே அரசியல் தீர்விற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்,வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள் ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு ஒரு தனி மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும், அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள்க, உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து தமது கோரிக்கை அடங்கிய மகஜர் வாசித்தனர்.

குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடுகையில், அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுக்கும், ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள்க.

வடக்கு கிழக்கு சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்த பேச்சு வார்த்தைகள் சிறுபான்மை தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகளுக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையே நடைபெறவுள்ளதாக அறிகின்றோம். - அதை நாங்கள் பெரிதும் வரவேற்கின்றோம்.

எனினும், தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் கோரிக்கைகளையும், அரசியல் தேவைகளையும் உள்ளடக்கிய வகையில் இப்பேச்சு வார்த்தைகள் அமைய வேண்டுமானால் இப்பேச்சு வார்த்தைகள் வெளிப்படை தன்மை உடையதாக நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

ஆனால் தற்போதைய நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளிடையே அரசியல் தீர்விற்கான நடவடிக்கைகள் ஒருமித்த முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்பதை நாம் வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

மேலும், நடைபெற உள்ள அரசியல் தீர்வு தொடர்பான இப் பேச்சு வார்த்தைகளில் தனியொரு கட்சியைச் சார்ந்த ஒரு சில பிரதிநிதிகள் மாத்திரம் கலந்து கொள்ளவுள்ளதாக ஊடகங்கள் ஊடாக தகவல்கள் வெளி வருகின்றமையை நாம் பார்க்கின்றோம்.

மேலும், அக்குறிப்பிட்ட அரசியல் கட்சியின் தலைமைத்துவங்களிடேயும் பரஸ்பரம் வெளிப்படைத் தன்மையுடைய கலந்துரை யாடல்களோ, ஒருமித்த முன்னெடு ப்புக்களோ காணப்படாததை நாங்கள் இங்கு சுட்டிக் காட்டுகிறோம். இது இத்தரப்பினர்களை தேர்தல் மூலம் தெரிவு செய்த மக்கள் மத்தியில் காணப்படும் விமர்சனமாக உள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் மக்களின் நிலையான அரசியல் தீர்வுக்கு பங்கம் விளைவிக்கும் ஜனநாயகமற்ற போக்காக காணப்படுவதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு ஒரே குரலில் ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்த வேண்டும்.

இதுவே தமிழ் மக்கள் தமது ஜனநாயக வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்த தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகளின் கடமையாகும்.

அந்த வகையில் கீழ் குறிப்பிடப்படும் முக்கிய விடயங்களிலும், ஏனைய விடயங்களிலும் கவனம் செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

1. வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும்.
2. ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மத்திய அரசினால் மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்.
3. ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் பெண்கள் ஐம்பது வீதம் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.
5. தற்போது வடக்கு கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு, தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் என்பது 1983 களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.
6. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் மத, கலாச்சார இடங்கள் தொல்பொருள் பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப் படுவதும் அழிக்கப்படுவதும் உடன் நிறுத்தப்படல் வேண்டும்.
7. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டு மகஜர் ஊடகங்களுக்கு வாசிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (5-01-2023)**

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS C R PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
**வசந்தி சிவராஜா - 416-616-3077**

# இவ்வார ராசிபலன்

**06-01-2023 வெள்ளி தொடக்கம் 12-01-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும். இனிய தகவல் வந்து சேரும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். வசந்தம் தேடி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். திடீர் செலவு ஏற்படும். நட்பால் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பலன் தரும். பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். பிரச்சனைகள் அகலும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளம் மகிழும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தெய்வீகப் பற்று கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**ரிஷபம்:** வம்பு தும்புகள் ஒழியும். தாய், தந்தை உதவி உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தீர்த்த யாத்திரை உண்டு. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீர்வு தரும். வியா-பாரம் சிறக்கும். பங்குச்சந்தையில் லாபம் வரும். பயணம் அனுகூலம் தரும். முயற்சிகள் பலன் தரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்துக்கள் சேரும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் மறையும். விடாமுயற்சி அவசியம். உடல் உபாதைகள் நீங்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். வேலை பளு குறையும். மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. தனவரவு பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**மிதுனம்:** நினைத்த காரியம் நிறைவேறும் வாரம். தன்னம்பிக்கை கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். தோஷங்கள் ஒதுங்கும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வீண் வம்பு உருவாகும். பழைய பாக்கி வசூலாகும். திறமைகள் வெளிப்படும். புதிய முதலீடு லாபம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். வாகனத்தால் செலவு உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. உற்சாகம் அலைமோதும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய நண்பர்களால் தகுதிகள் உயரும். பெற்றோரின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L




**கடகம்:** அதிகாரமான பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். வெற்றியை எட்டும் காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பட்டம் பதவி வந்து சேரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆதாயம் பெருகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன்தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. பருப்பு தானம் பாவம் போக்கும். தொல்லைகள் விலகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்கள் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. செயல்களில் கவனம் தேவை. பாராட்டுக்கள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,O



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
**'ராஜயோகம்'**
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். உறவினரால் உதவி கிட்டும். வழக்குகள் சாதகமாகும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உறவுகளால் நன்மை உண்டு. எடுத்த முயற்சி வெற்றி பெறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். சுபிட்ஷங்கள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். வாகன மாற்றம் உண்டு. புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். கட்டிடத் தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,4,2,8
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q




**கன்னி:** மங்களச் செய்தி வரும் வாரம். நெருக்கடிகள் குறையும். பழைய பகை தீரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். கல்வியில் மேன்மை உண்டு. கலைர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்லத்தில் அமைதி பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதற்றம் குறையும். சுறுசுறுப்பு பெருகும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பு பெருகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய நட்பில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். விவசாயம் பலன் தரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். கோரிக்கைகள் நிறைவேறும். பெற்றோர் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கை பிடிப்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நன்மதிப்பு கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். கடன் சுமை குறையும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். குடும்ப வி'யத்தில் கவனம் தேவை. தாராளமான தனவரவு உண்டு. கனவுகள் பலிதமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். மருத்துவச் செலவு குறையும். நினைவாற்றல் பெருகும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 7,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,M




**துலாம்:** வரவும், உறவும் வலிமையாகும். பகை மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பயணங்கள் பலன் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத் தொழில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். மனச்சுமை குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் வாங்க நேரிடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அன்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வேண்டாத உறவுகளைத் தவிக்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். நிர்வாகப் பொறுப்பு கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அரசியல் ஆதாயம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெகுமானம் கிடைக்கும் காலம். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பெண்களால் பெருமை சேரும். தனவரவு உண்டு. செயல்திறமை வெளிப்படும். ஞாபக மறதி ஏற்படும். ஆன்மீக ஈடுபாடுகள் அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். சுபச்செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். கருத்து வேறுபாடுகள் விலகும். புத்தி சாதுர்யம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W




**விருச்சிகம்:** ஆசைப்பட்ட பொருள் சேரும் வாரம். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். பண தேவைகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். மனஅமைதி அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வரவுகள் மிகுதியாகும். உடல் நலம் சீராகும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். ஆழமான மேன்மைகள் அமையும். பயணம் அனுகூலம் தரும். பொருளாதாரம் உயரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. அயல்நாட்டுப் பயணம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. பெண்களால் பெருமை உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். திடீர் பயணம் லாபம் தரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பதவி உயர்வு தாமதமாகும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,A

(தொடர்ச்சி _30_ பக்கம்)


tasty தமிழா
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC


அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்கள்
கனடா வருவதற்கான விசா
ஏற்பாடுகளை இலகுவான முறையில்
விரைவில் செய்து தருபவர்கள்...
STUDENT VISA
BUSINESS VISA
FAMILY VISIT VISA
SPOUSE VISA - WORK PERMIT
SUPER VISA
REJECTION VISA APPEAL & MANY MORE . . .
CANADA VISA REFUSED?
Don't Worry We have Solution!
Call or visit us with your documents.
விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான
Bank Balance சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.
FINANCIAL SPONSORSHIP
Fixed Deposit, Saving Deposit, Bank Statements,
Student Loans & Many more . . .
P. Vijay
Director - Flex Institute
P. Jegan
Director - Flex Institute
+94 77 77 613 46
flex Institute
Step Towards a Bright Future
10 Years of Trusted Services
Level 12, Parkland Building
33 Park St, Colombo 2,
Sri Lanka.
www.flexinstitute.lk
flexinstitute
flexinstitute



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1030



## புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்
## புற்றளை, பருத்தித்துறை

"வேட்கை வினை முடித்து மெய்யடியார்க் கின்பஞ் செய்
ஆட்கொண்டருளும் அரன்சேயை – வாட்கதிர்கொள்
காந்தார மார்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தாஉடைத்தமரர் விண்"

பெரியவர் ஆலயப்பொறுப்பை ஏற்றதும் சிதம்பரவிநாசியாருடைய பிள்ளைகள் அகமகிழ்ந்து, தமது வேண்டுகோளுக்கு அருள்புரிந்த பிள்ளையாரை மனமார வணங்கிப் போற்றினர். கிராமமக்களும் செய்தியறிந்து தமது ஒத்துழைப்பையும் நல்கி பெரியவர் பண்டாரத்தை ஆதரித்து, சகல வழிகளிலும் ஆலய வளர்ச்சிக்குத் துணைநின்றனர். பெரியவர் பண்டாரத்தின் வருகையால் ஆலயம் புதுப்பொலிவு பெற்றது. பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றது. ஊரவர்கள் பெரிய பண்டாரம் எனப் போற்றினர்.

பெரிய பண்டாரத்தின் பின் புற்றளை சித்தி விநாயகர் ஆலயப்பொறுப்பை சிவசங்கரக்குருக்கள் ஏற்றுக் கொண்டார். இவர் காலத்தில் ஆலயத் திருப்பணி வேலைகள் நடைபெறத் தொடங்கியது. ஆலயமும் பலவழிகளிலும் பொலிவு பெற்று விளங்கியது. இவரின் பின் இவரது மகனான சிவசுப்ரமணியக் குருக்கள் இவ்வாலயத்தின் பூசைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். இவரை ஊரவர்கள் பெரிய குருக்கள் என அழைத்தனர்.

சிவசங்கரக்குருக்கள் காலத்தில் ஆரம்பமான ஆலயத் திருப்பணிவேலைகள், சிவசுப்ரமணியக்குருக்கள் காலத்தில் பூர்த்தியடைந்தது. இவ்வாறான படிமுறை வளர்ச்சியின் பின்னர் சிவசுப்ரமணியக் குருக்கள் காலத்தில், இவ்வாலயத்திலே ஆலய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற ஆரம்பித்தது. புற்றளை சித்திவிநாயகர் ஆலய வளர்ச்சிப் படிமுறையில் ஊர் மக்களால் மிகவும் போற்றப்படவராக சிவசுப்ரமணியக் குருக்கள் விளங்கியுள்ளார்.

சிவசுப்ரமணியக் குருக்களின் பின் இவரது தத்துப் புத்திரரான வேதையாக் குருக்கள் இவ்வாலயத்தின் பூசைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். ஆலயத்தில் பெரிய பண்டாரத்துடன் ஆரம்பித்த இந்தியத் தொடர்பு வேதையாக் குருக்களுடன் நிறைவு பெற்றது. இவரின் பின் இம்பிலிட்டி சோமாஸ்கந்தக் குருக்கள் ஆலய பூசகராக நியமனம் பெற்றார். இவரைத் தொடர்ந்து இவரது மருமகன் விஜயரத்தினக் குருக்களும், பின்னர் இவரது சகோதரரான ஜெயபாலசுந்தரக் குருக்களும் புற்றளை சித்தி விநாயகர் ஆலயக் குருக்களாகப் பணிபுரிந்தனர்.

இவ்வாலயத்திலே வருடந்தோறும் ஆனிமாதத்திலே வருடாந்த திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். பூரணைக்கு முதல்நாள் தேர்த்திருவிழாவும், பூரணை தினத்தில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். இவற்றோடு வருடப்பிறப்பன்றும் சிறப்பான முறையில் திருவிழா இடம்பெறும். அத்தோடு மணவாளக்கோலத்திருவிழா, கந்தசஷ்டி தினத் திருவிழா, திருக்கார்த்திகைத் திருவிழா, விநாயகசஷ்டி, கஜமுகாசுரசங்காரத் திருவிழா, திருவெம்பாவை, திருவாதிரைத் திருவிழா ஆகியனவும் சிறப்பாக நடைபெறுவதோடு, கந்தப்புராண படனமும் நடைபெறும்.

சிதம்பர விநாசியரால் கொட்டிலாக அமைக்கப்பட்ட புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தில் ஊரவர்களின் உதவியுடன் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டது. முதல் கும்பாபிஷேகம் பல வருடங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் திருப்பணிவேலைகள் நிறைவுபெற்று பல சிறப்பாக நடைபெற்றுள்ளது. இதன் பின்னர் குறிப்பிடத்தக்கவகையில் இரண்டாம் முறையாக சம்புரோட்சண மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இக் கும்பாபிஷேகம் 1971 ஆம் ஆண்டு மகாசி மாதம் 23 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இவ்வாறான கும்பாபிஷேகங்கள் ஆலயத் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டபின்னர் பல்வேறு நிலையில் நடைபெறுவது வழக்கம்.

இவ்வாலய வளர்ச்சியை நோக்கின், தற்காலத்தில் ஆகம விதிமுறைகளுக்கமைந்த ஒரு ஆலயமாகத் திகழ்கின்றது. கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், ஸ்தம்பமண்டபம், வசந்த மண்டபம், கோபுரவாசல் மண்டபம் ஆகிய இவையனைத்தும் கொண்ட ஆலயமாக புற்றளை சித்திவிநாயகர் ஆலயம் திகழ்கின்றது. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக விநாயகர் விளங்குகின்றார். இவ்வாலயத்தின் தெற்கு வாசல் மூர்த்தியாக வள்ளி தெய்வானை சமேத சுப்ரமணியர் எழுந்தருளியுள்ளார். வைரவ சண்டேசுர மூர்த்திகளுக்கும் சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

*வளரும்...*

## இவ்வார ராசிபலன்

*(28 பக்கத் தொடர்ச்சி)*




**தனுசு:** பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உயர் பதவி யோகமுண்டு. சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தெய்வ பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். பொருள் வரவு ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். பணியில் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். புதிய சிந்தனை உதயமாகும். பொறுப்புக்கள் கூடும். உள்ளம் மகிழும். உதவிகள் குவியும். இரகசியம் காப்பது நல்லது. முயற்சிகளில் வளர்ச்சி அடைவீர்கள். தொட்ட காரியம் ஜெயமாகும். இல்லத்தில் அமைதி கூடும். தேகப் பலன் கூடும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. ஆபத்துக்கள் விலகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். விரக்திகள் மறையும். வங்கி சேமிப்பு உயரும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். நலம் விளையும் வாரம். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். தேக பலம் கூடும். திருமண முயற்சி வெற்றி பெறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். முகப்பொலிவு கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பெயர், புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். புதிய நட்பு உருவாகும். தொழில் வளம் கூடும். முற்போக்கு சிந்தனை வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாருதி (அனுமன்), அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,F




**மகரம்:** புதிய எண்ணங்கள் உருவாகும் வாரம். குளிர்பான தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். நன்மையான காலம். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கர்ம வினைகள் அகலும். பணக்கட்டுப்பாடு அவசியம். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. தனவரவு பெருகும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காரியம் கைகூடும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரார்த்தனைகள் நிறைவேறும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். வீண் விரயம் தவிர்க்கவும். உறவுகளால் மதிப்பு உயரும். பாக்கிகள் வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலிகருப்புசுவாமி, அதிர்ஷ்ட எண்: 3,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P




**கும்பம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். எதிரிகள் உதிரியாவார்கள். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பாதகமாக சூழ்நிலைகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உடல்நலம் திருப்தி தரும். பெருமிதம் நிறைந்த காலம். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். சாதனை படைக்கும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். பூமியால் நன்மை உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும் வெகுமதியும் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,7,9,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,L




**மீனம்:** தலைசிறந்த பதவி கிடைக்கும் வாரம். எண்ணம் கைகூடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். அற்புதமான காலம். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. பொறாமைகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்கள் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் லாபம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை மாறும். வார்த்தைகளில் நிதானம் தேவை. செயல்களில் பொறுமை தேவை. சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். உடல்நலம் மேம்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K


MORTGAGE FINANCIAL
Home / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
MERRY CHRISTMAS
HAPPY New Year 2023
எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
உறவினர் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம் !
SUBRA MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
* 1st & 2nd Mortgages
* Refinance, Renewal & Switches
* Equity Line of Credit
Commercial Mortgages
* 1st & 2nd Mortgages
* Refinance, Renewal & Switches
* Equity Line of Credit
NESAN
416-908-5656
Off: 416-660-5656 | Fax: 647-351-3099
Toll Free: 1-844-878-2721
mortgage@subra.com
www.subra.com
Our off: 1585 Markham Rd, Unit # 406, Toronto, M1B 2W1, Canada
Powered by
MORTGAGE ALLIANCE
TD Canada Trust
RFA
WE DEAL WITH ALL BANKS
Scotiabank
EQUITABLE BANK
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
Brokerage # 10330
radius financial
RMG mortgages
MCAP








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1396 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 6, 2023

# "சக்தி" ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களுக்கு "சக்தி பூஜா துரந்தரி" பட்டம் வழங்கிய ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்



கனடாவில் 1995ம் ஆண்டு மேல்வருவத்தூர் ஆதிபராசக்தி மன்றத்தை ஆரம்பித்து தொடச்சியாக அதனை நடத்தி வருகின்றவரும் பல சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றவருமான சக்தி" ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களுக்கு "சக்தி பூஜா துரந்தரி" எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார் ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானததின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள்.

அண்மையில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானததில் நடைபெற்ற மணவாளக்கோல கும்பாபிேக தின விழாவிற்கு அழைக்கப்பெற்றிருந்த சக்தி" ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களுக்கு "சக்தி பூஜா துரந்தரி" எனும் மேற்படி பட்டத்தை வழங்கிக் கௌரவித்த நிகழ்வில் பல அடியார்களும் கலந்து கொண்டார்கள்.

இங்கே காணப்படும் படத்தில் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் தனது துணைவியார் சகிதம் மேற்படி விருதினை ஞானம்மா அம்மையாருக்கு வழங்குவதைக் காணலாம்.



# யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த தர்மசீலன் செந்தூரனுக்கு புதுடெல்லியில் டாக்டர் பட்டம் வழங்கப்பெற்றது

சமூக சேவைக்கான கௌரவ டாகடர் பட்ட.ங்கள் இந்தியாவின் தலைசிறந்த நூறு பேருக்கு அண்மையில் புதுடெல்லியில் நடைபெற்ற சிறப்பு வைபவம் ஒன்றில் வைத்து வழங்கப்பெற்றன இதில் ஊடகவியலாளரும் சமூக சேவகரும் சாயி தர்மா ட்ரஸ்ட் ஸ்தாபகரும் யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்தவருமான தர்மசீலன் செந்தூரனுக்கும் பட்டம் வழங்கப்பெற்றது. விருது வழங்கும் வைபவத்தில் இந்திய பாராளுமன்ற மற்றும் டெல்லி சட்டசபை உறுப்பினர்கள் ஆகி-யோர் இணைந்து பட்டத்தை வழங்குவதைக் காணலாம்.

# எதிர்வரும் தைப்பொங்கல் தினங்களை கனடிய தமிழ் மக்களோடு கழிக்கவுள்ள "நீயா? நானா? கோபிநாத்



எதிர்வரும் தை 14 மற்றும் தை 15 ஆகிய இரு நாட்களையும் அதாவது தைப்பொங்கல் தினங்களை கனடா வாழ் தமிழ் மக்களோடு கழிக்கவுள்ள "நீயா? நானா? கோபிநாத் அவர்கள் கனடாவிற்கு 13ம் திகதி வருகை தரவுள்ளார்.

14ம் திகதி ஸ்காபுறோ நகரில் சீனக் கலாச்சார மண்டபத்திலும் 15ம் மொன்றியால் நகரில் மண்டபத்திலும் இடம்பெறவுள்ள விழாக்களில் கலந்து கொண்டு தமிழ் மக்களோடு உரையாடி அவர்களை மகிழ்விக்கவுள்ளவுள்ளார்.

இன்று திங்கட்கிழமை எமது கனடா உதயன் சென்னைப் பிரதிநிதி அருண் அவர்கள் கனடா உதயன் வெளியீடுகளான "இதுவரை" மற்றும் "பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்" ஆகிய நூல்களின் பிரதிகளை கோபிநாத் அவர்களிடம் கையளிப்பதை இங்கேயுள்ள படத்தில் காணலாம்.



# "தென்மராட்சி நிறுவனம் — கனடா இயக்குனர் சபை நடத்திய ஒன்றுகூடல் நிகழ்வும் இராப்போசன விருந்தும்

கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் சேவைகள் வழங்கும் நிறுவனமான "தென்மராட்சி நிறுவனம்- கனடா இயக்குனர் சபை நடத்திய ஒன்றுகூடல் நிகழ்வும் இராப்போசன விருந்தும் கடந்த திங்கட்கிழமை ஸ்காபுரோவில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக அவுஸ்த்திரேலியா வாழ் பொறியியலாளர் கருணாகரன் நடராஜா அவர்கள் கலந்து சிறப்பித்தார். நிறுவனத்தின் தலைவரும் தொழிலதிபருமான தேவதாஸ் (தாஸ்) அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில் தென்மராட்சி சேவை நிறுவனம் ஊடாக தாயகத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் பல அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார கல்வி சார்ந்த உதவிகள் வழங்குவதில் நிறுவனம் ஈடுபட்டுள்ளதாகவும் அதற்கு கனடாவில் நண்பர்களின் ஆதரவு கிட்டிவருவதாகவும் தெரிவித்தார். (உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)

# 35 மணி நேரம் தொடர்ச்சியாக நூல்கள் பற்றிய அறிமுக உரையாற்றி சாதனை புரிந்த அகணி சுரேஸ் பாராட்டப்பெற்றார்



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய தலைவரும் சாதனை முயற்சிகளை சிலவற்றை ஏற்கெனவே வெற்றிகரமாக நிறைவு செய்தவரும் இலக்கியவாதியுமான அகணி சுரேஸ் அவர்கள் மற்றுமொரு சாதனை முயற்சி அண்மையில் வெற்றிகரமாக இடம்பெற்றது.

35 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நூல்கள் பற்றிய அறிமுக உரையை நடத்தி இலக்கியச் சாதனையை நிலை நாட்டிய அவருக்கான பாராட்டு வைபவம் ஒன்றை கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் கடந்த திங்கட்கிழமை 2ம் திகதி நடத்தியது. உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)



